Postal Reg.No. GDP-39/2017-2019

بسم الله الرحمن الرحيم　　نحمده ونصلي على رسوله الكريم　　وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly **BADAR** Qadian TAMIL

தொகுதி 2

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

இதழ் 29

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

25 ஷவ்வால் 1438 ஹிஜ்ரி கமரி　20 வஃபா 1396 ஹிஜ்ரி ஷம்ஸி

20 ஜூலை 2017

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**ஈஸா மஸீஹ் மரணமடைந்து விட்டார் என்பதே உண்மையாகும். மேலும் ஸ்ரீநகர் முஹல்லா கான்யாரில் அவரது கல்லறை இருக்கிறது. இனி இறைவன் தானாக இறங்கி வருவான். சத்தியத்தோடு போர் புரியும் மக்களை எதிர்த்து அவனே போர் புரிவான்.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

உங்களின் நம்பிக்கையின்படி, மஸீஹ் இப்னு மர்யம் வானத்திலிருந்து எந்த வேலைக்காக இறங்கி வருவாரோ அதாவது மஹ்தியுடன் சேர்ந்து மக்களைப் பலவந்தமாக முஸ்லிம்களாக்குவதற்காக போர் புரிவார். இந்த நம்பிக்கை இஸ்லாத்திற்கு கெட்ட பெயரை உண்டாக்குகிறது. மார்க்கத்தில் பலவந்தம் கூடும் எனத் திருக்குர்ஆனில் எங்கு இடம் பெற்றுள்ளது ? இதற்கு மாறாக இறைவன் திருக்குர்ஆனில் لَآ اِكْرَاهَ فِي الدِّيْنِ என்று கூறுகிறான். அதாவது, மார்க்கத்தில் பலவந்தம் இல்லை என்பதாகும். (திருக்குர்ஆன் 2:257) இவ்வாறிருக்க பலவந்தத்திற்குரிய அதிகாரம் மஸீஹ் இப்னு மர்யமுக்கு எவ்வாறு அளிக்கப்படும் ? (மக்களை) இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளச் செய்தல் அல்லது (அவர்களை) கொலை செய்தல் என்பதைத் தவிர 'ஜிஸ்யா' என்னும் வரியையும் (ஈஸாவாகிய அவர்) ஏற்றுக் கொள்ளமாட்டாராம். இப்போதனை திருக்குர்ஆனில் எந்த இடத்தில் எந்த பாகத்தில் எந்த அதிகாரத்தில் இடம் பெற்றிருக்கிறது ?

மார்க்கத்தில் பலவந்தம் இல்லை என்று திருக்குர்ஆன் முழுவதும் திரும்பத் திரும்ப கூறிக் கொண்டிருக்கிறது. மேலும் திரு நபி (ஸல்) அவர்களது காலத்தில் எவர்களோடு போர்கள் புரியப்பட்டனவோ அந்த போர்களெல்லாம் மார்க்கத்தை பலவந்தமாய்ப் பரப்புவதற்காகப் புரியப்பட்டவை அல்ல; மாறாக முஸ்லிம்களுக்கு அநியாயம் செய்த அந்த நிராகரிப்பாளர்களுக்கு தண்டனை வழங்கும் பொருட்டே நடந்தன. அதாவது எவர்கள் முஸ்லிம்களின் பெரும்பாலானவர்களைக் கொலை செய்தார்களோ சிலரை நாட்டை விட்டு வெளியேற்றினார்களோ மிகவும் கொடூரமான அநியாயங்களை செய்தார்களோ அவர்களுக்குத் தக்க தண்டனை கொடுக்கவே முஸ்லிம்கள் அனுமதிக்கப்பட்டார்கள் எனத் திருக்குர்ஆன் தெளிவாகக் கூறுகிறது. இதைப் பற்றி இறைவன் கூறுவதாவது: اُذِنَ لِلَّذِيْنَ يُقٰتَلُوْنَ بِاَنَّهُمْ ظُلِمُوْا وَاِنَّ اللّٰهَ عَلٰى نَصْرِهِمْ لَقَدِيْرُ

பொருள்: எந்த முஸ்லிம்களோடு நிராகரிப்பாளர்கள் போர் புரிகிறார் -களோ அவர்களுக்கு அநீதியிழைக்கப்பட்ட காரணத்தால் அந்நிராகரிப்பாளர் -களை எதிர்க்க அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு உதவி புரிவதில் இறைவன் வல்லமையுள்ளவனாய் இருக்கிறான். அல்லது அவை தற்காப்புக்காக வேண்டி செய்யப்பட்ட போர்களாகும். (22:40) அதாவது, எவர்கள் இஸ்லாத்தை அழித்தொழிப்பதற்காக படையெடுத்து முந்திக் கொண்டார்களோ அவர்களுக்கு எதிராகவும் அல்லது எவர்கள் தமது நாட்டில் இஸ்லாம் பரவுவதைப் பலவந்தமாய்த் தடை செய்தார்களோ அவர்களிடமிருந்து தங்கள் உரிமையைப் பாதுகாப்பதற்காகவும் அல்லது நாட்டில் சுதந்திரத்தை நிலை நாட்டுவதற்காகவும் இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் போர்கள் புரியப்பட்டன.

இம்மூன்று வகைகளைத் தவிர திரு நபி (ஸல்) அவர்களும் அவர்களது பரிசுத்த கலீஃபாக்களும் எவ்வித போரும் புரியவில்லை. மேலும் இஸ்லாம் பிற வகுப்பினரால் இழைக்கப்பட்ட அநியாயங்கள் மீது மிகுதியான அளவில் பொறுமையைக் கடைபிடித்து வந்திருக்கின்றது. இதன் முன்மாதிரியை பிற சமுதாயத்தார்களிடம் நம்மால் காணவே முடியாது. இவ்வாறிருக்க இந்த ஈசா மஸீஹும், மஹ்தி சாஹிபும் வந்ததுமே மக்களை எவ்வாறு கொன்று குவிக்கக்கூடியவராக இருப்பர் ? மேலும் அவர்கள் வந்ததுமே வேதம் அளிக்கப்பட்டவர்களிடமிருந்து 'ஜிஸ்யா' என்னும் வரி ஏற்றுக் கொள்ள மாட்டார்களாம்.

மேலும் حَتّٰى يُعْطُوا الْجِزْيَةَ عَنْ يَّدٍ وَّهُمْ صٰغِرُوْنَ பொருள்: அவர்கள் தங்கள் விருப்பத்துடன் ஜிஸ்யா (கப்பம்) கட்டி உங்களுக்குப் பணிந்து விடும் வரை போர் புரியங்கள். (அதாவது பணிந்து விட்டால் போரை நிறுத்தி விடுங்கள்) (9:29) என்ற திருவசனத்தையும் இவர்கள் ரத்து செய்து விடுவார்களா ? திரு நபி (ஸல்) அவர்களது காலத்தில் கூட ரத்து செய்யப்படாத குர்ஆனின் இவ்வசனங்களை, வந்ததுமே ரத்து செய்யும் ஈசா மஸீஹ் (மஹ்தியாகிய) இவர்கள் இஸ்லாம் மார்க்கத்திற்கு எவ்வாறு துணைபுரியக் கூடியவர்களாக ஆக முடியும் ? இவர்கள் செய்யும் இப்பெரும் புரட்சியினால் 'கத்மே நுபுவத்திற்கு' எவ்வித பாதிப்பும் உண்டாக மாட்டாதாம்.

நுபுவ்வத்தின் காலம் கடந்து 1300 ஆண்டுகள் ஆகி விட்ட இக்காலத்தில் இஸ்லாத்திற்குள்ளேயே 73 பிரிவுகள் உண்டாகியிருக்கையில் உண்மையான மஸீஹ் வந்து செய்ய வேண்டிய வேலை வாளைக் கொண்டு அல்லாமல் ஆதாரங்களைக் கொண்டு உள்ளங்களை வெல்ல வேண்டியதாகும். மேலும் வெள்ளி, தங்கம், பித்தளை, மரம் இவற்றைக் கொண்டு உருவாக்கப்படும் சிலுவைகளை உடைத்துக் கொண்டு திரிவதற்குப் பதிலாக அச்சிலுவைகளின் மீதுள்ள கொள்கையை, சரியான, உண்மையான ஆதாரங்களைக் கொண்டு உடைப்பதுமேயாகும்.

நீங்கள் பலவந்தத்தை உபயோகிப்பீர்களேயானால் உங்களது உண்மைக்கு எவ்வித ஆதாரமும் உங்களிடம் இல்லை என்பதற்கு இந்த பலாத்காரமே போதுமான ஓர் அத்தாட்சியாகும். எப்போதும் ஒவ்வோர் அறிவீனனும் நெறிதவறியவனும் எவ்வித ஆதாரமும் காட்ட முடியாமல் தோல்வியைக் காண்பானோ அப்போதே அவன் வாள் அல்லது துப்பாக்கியின் பக்கம் தனது கரங்களை நீட்டுகிறான். ஆனால் வேறு வழி இல்லாமல் வாளின் உதவியைக் கொண்டு பரவக் கூடிய ஒரு மதமானது ஒருபோதும் இறைவன் புறமிருந்து வந்திருக்க முடியாது. நீங்கள் இவ்வாறான 'ஜிஹாத்' என்னும் அறப்போரை கைவிடாமல் அதன் மீது ஆவேசமுற்று உண்மையாளருக்குத்

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

கடந்த குத்பாவில் நல்லொழுக்கத்திற்கும் தக்வாவுக்கும் உள்ள தொடர்பை விளக்கினேன். தக்வாவுக்கு நல்லொழுக்கம் அவசியமாகும் என்று கூறியிருந்தேன். இது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வழிகாட்டலாகிய இறையச்சம் உள்ள மனிதன் ஆவதற்கு ஒருவரிடம் எல்லா நல்லொழுக்கமும் இருக்க வேண்டும் என்பதையும் கூட கூறியிருந்தேன்.

எல்லாவற்றையும் விட மிக முக்கியமான விஷயம் அல்லது நல்லொழுக்கமாகவும் ஒரு நம்பிக்கை கொண்டவரின் அடிப்படை நிபந்தனையாகவும் இருப்பது உண்மையில் நிலை நிற்பதும், பொய்யிலிருந்து விலகுவதும் ஆகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கட்டளைகளின் ஒளியில் உண்மையின் முக்கியத்துவம் மற்றும் அதன் எதிர்பார்ப்புகள் தொடர்பாக ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறி அது தொடர்பாக ஜமாஅத் சகோதரர்களுக்கு முக்கியமான போதனைகளை வழங்கினார்கள்.

இப்போது சில நாட்களுக்கு முன்னர் National Geographic என்ற ஒரு பத்திரிகையில் வெளியிடப்பட்டிருந்த ‘மக்கள் ஏன் பொய் கூறுகின்றனர்?’ என்ற தலைப்பில் வந்த கட்டுரையில் பொய் கூறுவதற்காக கூறப்பட்டிருந்த காரணங்களை எடுத்துக் கூறி அதைப் பற்றி விமர்சனம் செய்தவாறு இஸ்லாமிய போதனைகளைச் சான்றாகக் காட்டி உண்மை, நேர்மையான வார்த்தையைப் பேசுவது தொடர்பாக ஹுஸூர் அவர்கள் வலியுறுத்திக் கூறினார்கள்.

பிறகு நம்பிக்கை கொண்டவரின் நல்லொழுக்கமாக இருக்க வேண்டிய இறை நெருக்கத்தைப் பெற்றுத் தருகிற இன்னொரு முக்கியமான ஒரு பண்பு பணிவு மற்றும் அகம்பாவத்திலிருந்து விலகுதல் ஆகும்.

---

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கட்டளைகளின் ஒளியில் அகம்பாவத்தின் பல்வேறு வடிவங்கள் பற்றி எடுத்துக் கூறி அவற்றிலிருந்து தவிர்ந்திருப்பது மற்றும் பணிவைக் கடைபிடிப்பது தொடர்பாக ஹுஸூர் அவர்கள் அறிவுரைகளை வழங்கினார்கள்.

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் மார்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**
**16 ஜுன் 2017** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1396 -ஆம் ஆண்டு **இஹ்ஸான்** மாதம் **16 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ. اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ. مٰلِكِ يَوْمِ الدِّيْنِ. اِيَّاكَ نَعْبُدُ وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ. اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ. صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ.

கடந்த குத்பாவில் நல்லொழுக்கத்திற்கும் தக்வாவுக்கும் உள்ள தொடர்பை விளக்கினேன். தக்வாவுக்கு நல்லொழுக்கம் அவசியமாகும் என்று கூறியிருந்தேன். இது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வழிகாட்டலாகிய இறையச்சம் உள்ள மனிதன் ஆவதற்கு ஒருவரிடம் எல்லா நல்லொழுக்கமும் இருக்க வேண்டும் என்பதையும் கூட கூறியிருந்தேன்.

எனவே ஒரு நம்பிக்கையாளர் எல்லா நல்லொழுக்கங்களையும் கைக்கொள்ள வேண்டும். அல்லாஹ் கட்டளையிட்டுள்ள எல்லா ஏவல் கட்டளைகளையும் கடைபிடிக்க வேண்டும். அல்லாஹ், விலகியிருக்குமாறு கட்டளையிட்ட எல்லா விலக்கல் கட்டளைகளையும் பேண வேண்டும். அப்போதுதான் அவரிடம் ஒரு இறையச்சமுள்ளவருக்குத் தேவையான உயர் நல்லொழுக்கம் உருவாக முடியும். ஆனால் சில ஒழுக்கங்கள் எத்தகையவை எனில் அது ஒரு நம்பிக்கையாளரிடம் இல்லை என்றால் அவரது நம்பிக்கையின் தரமும் வீழ்ச்சி அடைகிறது. அதுவும் கூட இருக்கிறதா? இல்லையா? என்று பார்க்கத்தக்கதாகி விடுகிறது. தக்வா அதற்கு அப்புறம்தான். முதலில் ஈமானை பாதுகாக்க வேண்டும். இவற்றில் எல்லாவற்றையும் விட மிக முக்கியமான விஷயம் அல்லது நல்லொழுக்கமாகவும் ஒரு நம்பிக்கை கொண்டவரின் அடிப்படை நிபந்தனையாகவும் இருப்பது உண்மையில் நிலை நிற்பதும், பொய்யிலிருந்து விலகுவதும் ஆகும்.

திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான்: فَاجْتَنِبُوا الرِّجْسَ مِنَ الْاَوْثَانِ وَاجْتَنِبُوْا قَوْلَ الزُّوْرِ நீங்கள் சிலைகளின் அசுத்தங்களிலிருந்து விலகுங்கள். மற்றும் பொய் சொல்வதிலிருந்தும் விலகுங்கள். (22:31)

எனவே சிலை வணக்கம் மற்றும் பொய் பேசுதல் இரண்டையும் இணைத்து தெளிவுபடுத்தி விட்டான். நமக்குள் உண்மை இல்லையென்றால் உண்மை பேசும் வழக்கம் இல்லை என்றால் அது சிலைகளை வணங்குவது போன்ற பெரும் பாவமாகும். ஒரு நம்பிக்கை கொண்டவர் இறைவனுடைய ஏகத்துவத்தின் மீது ஈமானும் கொண்டு பிறகு வெளிப்படையானதும் மறைமுகமானதுமான சிலை வணக்கத்திலும் கலந்திருப்பது என்பது சாத்தியமில்லாத ஒன்றாகும்.

எனவே, இது மிகவும் தெளிவான எச்சரிக்கை ஆகும். ஈமான் கொண்டவராக வாதிக்கின்ற ஒருவருக்கு அந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஒருவர் நம்பிக்கை கொண்டவர் என்றால் பிறகு உண்மையின் தரத்தையும் கடைபிடிக்க வேண்டும். அது அல்லாமல் அவர் தனது ஈமானைப் பற்றி கவலைப்பட வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் இது சம்பந்தமாக மிகவும் தெளிவாக கவனமூட்டியுள்ளார்கள். சிலை என்றால் என்ன? தமது ஈமானை பாதுகாப்பாக வைக்கவும் அதில் முன்னேற்றம் பெறவும் எந்தெந்த சிலைகளின் அசுத்தங்களிலிருந்து விடுபட வேண்டும்; தப்பிக்க வேண்டும் என்றும், என்ன வழிமுறையை அதற்காக கையாள வேண்டும் என்றும் விளக்கியுள்ளார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இதனை தனது பல்வேறு நூல்களில் விளக்கி–யுள்ளார்கள். தமது சபையிலும் மீண்டும் மீண்டும் குறிப்பிட்டுள்ளார்கள். மிகவும் தெளிவாக உண்மையின் முக்கியத்துவத்தை விளக்கியுள்ளார்கள். இது பற்றி மிகவும் வேதனையை வெளிப்படுத்தி–யுள்ளார்கள். ஒவ்வோர் அஹ்மதிக்கும் எப்போதும் அது நினைவில் கொள்ளத்தக்கதாகும். அதன் மூலம் நாம் நமது ஈமானை உறுதிப்படுத்தியவாறு தக்வாவின் பக்கம் முன்னேறுபவராக வேண்டும். அன்னாரின் பல்வேறு மேற்கோள்களை இது சம்பந்தமாக எடுத்து வைப்பேன். வெளிப்படையாகப் பார்க்கும்போது எல்லாமே ஒன்றுபோல் தோன்றும். ஒவ்வொரு வாக்கியத்திலும் தனித்தனி பாடமும் அறிவுரையும் உள்ளது.

அன்னார், நூருல் ஹக் என்ற தமது நூலில் கூறுகிறார்கள்: திருக்குர்ஆன் பொய் பேசுவதை சிலை வணக்கத்திற்குச் சமமானதாகக் கூறுகிறது. அல்லாஹ் கூறுகிறான். فَاجْتَنِبُوا الرِّجْسَ مِنَ الْاَوْثَانِ وَاجْتَنِبُوْا قَوْلَ الزُّوْرِ நீங்கள் சிலைகளின் அசுத்தங்களிலிருந்தும் பொய்யின் அசுத்தத்திலிருந்தும் விலகுங்கள். (22:31) (நூருல் குர்ஆன் எண்.2, ரூஹானி கஸாயின் தொகுதி 9 பக்கம் 403) இரண்டுமே அசுத்தங்கள்தான். அவற்றிலிருந்து விலகுங்கள். பொய்யின் காரணமாக இறைவனை விட்டு விலகும் நிலை ஏற்படும் என்று குறிப்பிடுகிறார்கள் அல்லது இவ்வாறு கூற வேண்டும். அல்லாஹ் பொய்யர்களை விட்டு விடுகிறான்.

இதுபற்றி அன்னார் கூறுகிறார்கள்: சிலை வணக்கம் மற்றும் பொய் பேசுவதிலிருந்து விலகுங்கள். அதாவது பொய்யும் ஒரு சிலைதான். அதனை நம்பி இருப்பவர் இறைவனை நம்புவதை விட்டு விடுகிறார். எனவே பொய் சொல்வதன் மூலம் இறைவனும் கை விட்டுப் போய் விடுகிறான். (இஸ்லாமீ உஸூல் கீ ஃபிலாஸபி. ரூஹானீ கஸாயின் தொகுதி 10 பக்கம் 361) பிறகு அல்லாஹ் அருகில் வருவதில்லை. இஸ்லாமிய போதனையின் தத்துவ ஞானம் என்ற நூலில் இதனைக் கூறியுள்ளார்கள். பிறகு லெக்சர் லாஹூரிலும் இதனை கூறியுள்ளார்கள். அதாவது சிலைகளிலும் பொய்களிலிலும் இருந்து விலகுங்கள். இரண்டும் அசுத்தமானவையாகும். (லெக்சர் லாஹூர். ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 157) ஆகவே தூய்மை ஆவதற்கு மனிதன் பொய்யிலிருந்தும் எல்லா வகையான இணை வைப்பிலிருந்தும் விலக வேண்டும்.

பிறகு அன்னார் ஒரு சபையில் கூறினார்கள்: திருக்குர்ஆன் பொய்யையும் கூட ஓர் அசுத்தமான –தாகவும் சிலையாகவும் கூறியுள்ளது. உதாரணமாக அது فَاجْتَنِبُوا الرِّجْسَ مِنَ الْاَوْثَانِ وَاجْتَنِبُوْا قَوْلَ الزُّوْرِ என்று கூறுகிறது. பாருங்கள். இங்கு பொய் சிலைக்கு ஒப்பாக வைக்கப்பட்டுள்ளது. உண்மையில் பொய்யும் ஒரு சிலையேதான். அது அல்லாமல் ஏன் அவர் உண்மையை விட்டு விட்டு பொய்யின் பக்கம் போகிறார்? எவ்வாறு சிலையின் கீழ் எந்த உண்மையும் இல்லையோ அதுபோன்று பொய்யின் கீழும் அசுத்தத்தை தவிர வேறொன்றும் இல்லை. வெறும் வெளிப்படையான பளபளப்பு மட்டுமே இருக்கும். அது தவிர அதன் கீழ் வேறொன்றும் இருப்பதில்லை. பொய் சொல்பவரின் நம்பகத்தன்மை எந்த அளவுக்கு

குறைந்து போகின்றதென்றால் அவர் உண்மையே கூறினாலும் அதிலும் கூட பொய்யின் கலப்பு இருக்கும் என்ற எண்ணமே தோன்றுகிறது. பொய் சொல்பவர் தமது பொய்யை குறைக்க வேண்டும் என்று விரும்பினால் அது உடனே விலகாது. அதாவது பழக்கம் ஏற்பட்டு விட்டால் அது விரைவாக விலகி விடாது.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: நீண்ட காலமாக முயற்சி செய்தால் அப்போது அவருக்கு உண்மை பேசுவதற்கான பழக்கம் ஏற்படும். (மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 350; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) சிலர் ஒவ்வொரு விஷயத்திலும் தவறாக பேசுவதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். பிறகு இவர்களுக்கு மிகவும் உழைக்க வேண்டியது வருகிறது. நீண்ட காலம் முயற்சி செய்ய வேண்டியது வருகிறது. அதன் பிறகே உண்மை பேசுவதற்கான பழக்கம் ஏற்படும். பிறகு உலகியல் வெற்றி பெறுவதற்கு ஏதாவது சில தவறான வாக்குமூலங்களும் பொய்களும் சொல்ல வேண்டிய தேவைதான் ஏற்படுகிறது. அது அல்லாமல் வாழ முடியாது என்று கருதுகின்றனர்.

இவர்களது இந்த எண்ணத்தை மறுத்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: அல்லாஹ் சிலை வணக்கத்துடன் சேர்த்து இந்த பொய்யை இணைத்துள்ளான். ஒரு முட்டாள் மனிதன் அல்லாஹ்வை விட்டு விட்டு ஒரு கல்லின் முன் தலை குனிவது போன்று அவன் உண்மையையும் நேர்மையையும் விட்டு விட்டு தனது நோக்கங்களுக்காக பொய்யை சிலையாக்கி வைத்துள்ளான். இதன் காரணமாகத்தான் அல்லாஹ் இதனை சிலை வணக்கத்துடன் சேர்த்துள்ளான். ஒரு சிலையிடம் அவன் ஈடேற்றம் கேட்பது போன்று இவனை ஒப்பிடப்பட்டுள்ளது.

அவர்கள் கூறுகிறார்கள்: பொய் கூறுபவரும் தமது தரப்பிலிருந்து ஒரு சிலையை உருவாக்குகிறார். இந்த சிலை மூலம் ஈடேற்றம் கிடைக்கும் என்று கருதுகிறார்.

அவர்கள் கூறுகிறார்கள்: என்ன கேடு உங்களுக்கு வந்து விட்டது? ஏன் சிலையை வணங்குகிறீர்கள்? இந்த அசுத்தத்தை விட்டு விடுங்கள் என்று கூறப்பட்டால், எப்படி விலக முடியும்? அது அல்லாமல் வாழ்வை கழிக்க முடியாது என்கின்றனர். இதனை விட பெரிய பேறிழப்பு என்ன இருக்கிறது? பொய்யை தமது ஆதரவாகக் கருதுகின்றனர். ஆனால் நான் உங்களுக்கு உறுதி அளிக்கிறேன். இறுதியில் உண்மையே வெல்லும். வெற்றி அதற்கே.

அவர்கள் கூறுகிறார்கள்: நிச்சயமாக நினைவில் கொள்ளுங்கள். பொய்யைப் போன்ற அபத்தமான பொருள் ஒன்றுமில்லை. பொதுவாக உலகியல் –வாதிகள் கூறுவர். உண்மை சொல்பவர் பிடிக்கப் –படுவார் என்று அவர்கள் கூறுகின்றனர். ஆனால் நான் ஏன் அதனை நம்பப் போகிறேன்? என் மீது ஏழு வழக்குகள் தொடுக்கப்பட்டன. இறைவனின் அருளால் எனக்கு ஒரு வார்த்தை கூட பொய்யாக எந்த ஒன்றிலும் கூற வேண்டிய அவசியமே ஏற்படவில்லை. எந்த ஒன்றிலாவது இறைவன் எனக்கு தோல்வியை தந்ததாக எவராவது கூற முடியுமா? அல்லாஹ் உண்மைக்கு உதவியாளனாகவும், ஆதரவளிப்பவனாகவும் இருக்கின்றான். அவன் உண்மையாளருக்கு தண்டனை வழங்குபவனாக இருக்க முடியுமா? அவ்வாறு செய்தால் உலகில் எம்மனிதனும் உண்மை பேசத் துணிய மாட்டான். இறைவன் மீதுள்ள சரியான நம்பகத்தன்மை போய் விடும். நம்பிக்கையாளர் உயிரோடு இறந்து விடுவார்.

உண்மையான விஷயம் என்னவென்றால், உண்மை சொல்லி தண்டனை பெறுபவர் உண்மையின் காரணத்தால் தண்டனை பெறுவதில்லை. அந்த தண்டனை அவரது சில மறைவிலும் மறைவான தீய செயலின் காரணத்தால் விளைகிறது. நான் ஏதாவது குற்றத்தில் சிக்கிக் கொண்டு உண்மையைச் சொன்னதால் தண்டனை கிடைத்து விட்டது. அப்போது நன்மையின் காலகட்டம் ஒன்று தற்காலிகமாக வந்தது. உண்மையைக் கூறியதால் தண்டனை வந்து விட்டது என்று கூறுபவர், இந்த குற்றத்தினால் தனக்கு தண்டனை கிடைத்து விட்டது என்று கருத வேண்டாம். மாறாக அவரிடம் அதற்கு முன்பு இருந்த சில தவறான செயல்களினால் அவருக்கு தண்டனை கிடைத்துள்ளது. அவரது வேறு ஒரு பொய்யிற்காக தண்டனை கிடைத்துள்ளது. இறைவனிடம் அவரது பல தீமைகளின் பட்டியலே இருக்கிறது. தவறுகளின் தொடரின் பதிவுகள் உள்ளன. அதில் ஏதாவது ஒன்றிற்காக அவர் தண்டனை பெறுகிறார். (அஹ்மதி அவ்ர் கைர் அஹ்மதி மே கியா ஃபரக் ஹே? ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 478-480; 2009 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) நமது அமலின் எல்லா பதிவுகளும் அல்லாஹ்விடம் பாதுகாப்பாக உள்ளது. மக்களின் கம்பியூட்டர் பழுதாகி விடுகிறது. ஹேங்க் ஆகி விடுகிறது. ஸைபர் அட்டாக் ஆகி விடுகிறது. எல்லா டேட்டாக்களும் அழிந்து விடுகின்றன. அல்லாஹ்விடமுள்ள ரிக்கார்டை எவரும் அழிக்க முடியாது. முழுவதும் பாதுகாப்பாக உள்ளது. மனிதன் ஏதாவது சூழ்ச்சி செய்து, சாக்குப் போக்குகளைச் கூறி உலகியல் தண்டனையிலிருந்து தப்பி விடலாம். ஆனால் இறைவனை ஏமாற்ற முடியாது.

அவர்கள் கூறுகிறார்கள்: எனவே நீங்கள் நிரந்தரமான நன்மைகளின் வழக்கத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும். நன்மைகளின் முழுமையை எய்த வேண்டும். மனிதன் இஸ்திக்ஃபார் செய்து தீமைகளிலிருந்து தப்பிப்பதற்காக உறுதி எடுத்தால் பிறகு அதில் நிரந்தரமாக நிலைத்து நிற்க முயற்சி செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: எவ்வாறு பொய்யை விடுவது? என்று ஓர் உலகியல்வாதி கூறுகிறார். அதுவன்றி வாழ்வைக் கழிக்க முடியாதே? இது மிகப் பெரும் பலனைப் பெறுவதற்காக அல்ல. உலகியல்வாதிகளின் நிலையாவது எல்லா விஷயத்திலும் சின்னச்சின்ன காரியத்திற்காகவும் கூட பொய்தான் கூறுகிறார்கள். இந்த வகையில் கடந்த சில நாட்களுக்கு முன் National Geography –யின் பத்திரிகை வந்தது. அதில் பல்வேறு கட்டுரைகள் இருந்தன. பொய்யைப் பற்றி கூறப்பட்டிருந்தது. நாம் ஏன் பொய் சொல்கிறோம்? என்று ஆராய்ச்சி செய்யப்பட்டிருந்தது. வெளிப்டையாக பொய்யினால் வெற்றிகள் கிடைக்கின்றன என்று அதில் எழுதப்பட்டுள்ளது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: பொய்யினால் வெற்றிகள் கிடைக்கின்றன என்று மக்கள் கருதுகின்றனர். அதுவேதான் இங்கும் எழுதப்பட்டுள்ளது. பொய் சொல்வது மனிதனின் இயல்பு என்று அதில் நிரூபிக்கவும் முயற்சி செய்யப்பட்டுள்ளது. ஆனால் அது மனிதனின் இயல்பில் உள்ளதல்ல. சூழ்நிலைதான் மனிதனை பொய்யனாக்குகிறது. இம்மக்களுக்குப் பிறகு தனது உலகியல் நோக்கங்கள் இருக்கின்றன. பொய் சொல்வதை நியாயப்படுத்த அக்கட்டுரையில் முயற்சி செய்யப்பட்டுள்ளது. சின்னஞ்சிறு பருவத்திலேயே அதற்கான பழக்கம் ஏற்பட்டு விடுகிறது என்று அதற்கு ஆதரவாக தூண்டப்பட்டுள்ளது.

ஆனால் சிறு வயதில் கூட சுற்றுப்புறச் சூழல் தான் அதற்கான பழக்கத்தை ஏற்படுத்துகிறது. இப்போது அவர்களின் நிலை எப்படி இருக்கிறது என்றால் பொய் கூறும் போட்டியில் பங்கெடுப்பவர்களின் நிழற்படங்களும் பெருமையுடன் வெளியிடப்பட்டுள்ளன. அவர்கள் பெரிய சேம்பியன் ஆக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு அதற்காக பரிசுகளும் தரப்படுகின்றன.

அந்த பரிசுகளை பெறுபவர்களில் ஒருவர் கூறுகிறார்: சில கதைகள் சரியாக உள்ளன. அவற்றை கூறுகிறேன். ஆனால் அந்தக் கதைகளிலும் கூட பொய்யின் கலப்பு இல்லையெனில் மக்களுக்கு அக்கதைகள் சலிப்பை ஏற்படுத்தி விடுகின்றன. எனவே மக்களின் கவனத்தை ஈர்க்க பொய் சொல்கிறேன் என்று கூறுகிறார்.

பிறகு இக்கட்டுரையில் சிறுவர்களிலிருந்து அரசியல்வாதிகள் வரை வணிகர்களிலிருந்து விஞ்ஞானிகள் வரை எல்லாருடைய பேச்சிலும் பொய் சேர்ந்துள்ளது. இந்த சமூகத்தில் எந்த அளவுக்கு பொய் காணப்படுகின்றது என்றால் எல்லா பக்கமும் பொய்தான் தென்படும். அவர்களின் கருத்தின்படி இதிலிருந்து தப்பிப்பதற்கு வழியே இல்லை. பொய் சொல்வது நிர்பந்தம்; எனவே பொய் சொல்கிறோம்

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*என் கையில் ஒரு தீபம் உள்ளது. என்னிடம் வருபவர் அவ்வொளியிலிருந்து நிச்சயம் ஒளி பெறுவர். ஆனால் தவறான எண்ணத்தாலும் தீய யூகத்தாலும் விலகி ஓடுபவன் இருளில் எறியப்படுவான். இக்காலத்தின் உறுதி வாய்ந்த கோட்டை நானே...*

**மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா ஆதம்பாக்கம்**

**திருக்குர்ஆனிலிருந்து...**

*நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் எல்லாரும் முழுமையான கீழ்படிதலுக்குள் வந்து விடுங்கள். ஷய்த்தானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்லாதீர்கள். அவன் உண்மையிலேயே உங்களுக்கு (மிகவும்) பகிரங்கமான பகைவனாவான். (2:209)*

**A. சம்சுல் ஆலம்**

காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*உறுதியாக அறிந்து கொள்க. கண்ணின்றி காண முடியாதது போன்று, காதின்றி கேட்க முடியாதது போன்று நாவின்றி பேச முடியாதது போன்று திருக்குர்ஆனின் உதவியின்றி அந்த அன்பிற்குரிய இறைவனின் முகத்தைப் பார்க்க இயலாது.*

**M.Y. கன்சுல் ஆயிஷா**

சத்ர் லஜ்னா இமாயில்லாஹ், உடன்குபடி.

என்கின்றனர். நாம், இந்த மேற்கத்திய மக்களின் உண்மையின் தரம் உயர்ந்தது என்று கூறுகிறோம். ஆனால் இவர்களின் கட்டுரையைப் படித்தபோது இவர்களின் ஒவ்வொரு விவகாரமும் பொய்யை அடிப்படையாகக் கொண்டதாகவே படுகிறது. இவர்கள் முதலில் ஆரம்பகட்ட சர்வே செய்தார்கள். அதன் மூலம் ஒவ்வொரு மனிதனும் தினமும் 3,4 பொய்களைச் சொல்வதாகத் தெரிய வந்தது. இந்த அனைத்து பொய்களும் பலவகைப்பட்டவையாகும். சரியான முறையில் வழிகாட்டக் கூடாது என்பதற்காகவும் எவருக்கேனும் வழிகாட்டல் வழங்க வேண்டும் என்றால் அதிலும் பொய் கூறுகிறார்கள். சிலரை ஏமாற்றுவதற்காக பொய் சொல்கின்றனர். தமது பலவீனங்களை மறைப்பதற்காக பொய் சொல்கின்றனர். மேலும் பல்வேறு காரணங்களையும் சாக்குப்போக்குகளையும் பொய் சொல்வதற்காகக் கூறுகின்றனர். தம்மைப் பற்றி தவறான ஒரு நோக்கத்தை நிலைநாட்ட வைப்பதற்காக பொய் கூறப்படுகிறது. தமது சுயநலத்திற்காக சிறு சிறு விஷயங்களுக்காக பொய் கூறப்படுகிறது. பெரிய பெரிய பொய்களையும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. கணவன் மனைவி இருவரும் தத்தமது வெளித்தொடர்புகளை மறைப்பதற்காக பொய் சொல்கின்றனர். அதாவது மனைவி கணவர் இருவருக்குமே தவறான பிற தொடர்புகள் இருக்கின்றன. இதனால் பொய் சொல்ல வேண்டியது வருகிறது. ஒரு சுதந்திரத்தின் காரணமாக ஒரு பெரும் தீமை உருவாகிறது. இவ்வாறான சுதந்திரமான பழகுதல் காரணமாக தவறான தொடர்புகள் ஏற்படுகின்றன.

பிறகு பொய்யின் சாயம் வெளுக்கும்போது சண்டைகள் ஆரம்பமாகி விடுகின்றன. பிறகு பிரிவு, தலாக் வரை போகிறது. நம்மையும் கூட ஆய்வு செய்தால், தலாக் வரை போவதற்கான காரணம் பொய்யின் ஆதரவு நாடப்படுவதே ஆகும். இந்த அடிப்படையான விஷயத்தைக் கருத்தில் கொண்டே நிக்காஹ் குத்பாவில் ஓதுவதற்காக கூறப்பட்ட வசனங்களில் இதுவும் ஒன்றாகும்.

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ وَقُولُوا قَوْلًا سَدِيدًا நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வை அஞ்சுங்கள். நேர்மையான வார்த்தையைப் பேசுங்கள். **(33:11)**

மேலும் கூறுகின்றான்.

يُصْلِحْ لَكُمْ أَعْمَالَكُمْ وَيَغْفِرْ لَكُمْ ذُنُوبَكُمْ وَمَن يُطِعِ اللَّهَ وَرَسُولَهُ فَقَدْ فَازَ فَوْزًا عَظِيمًا

நீங்கள் அவ்வாறு செய்தால் அல்லாஹ் உங்கள் செயல்களைச் சீர்திருத்துவான்; உங்கள் பாவங்களை மன்னிப்பான். அல்லாஹ்வுக்கும் ரஸூலுக்கும் கட்டுப்படுபவர் மிகப்பெரும் வெற்றியை அடைகிறார். **(33:72)**

எனவே சுதந்திரம் இதுவேயாகும். இவர்கள் இந்த சுதந்திரத்தினால் பர்தாவை விடுகின்றனர். பர்தாவை விட்டவுடன் சந்தேகம் உருவாகிறது. பிறகு நம்பகத்தன்மை, இழப்பு உருவாகிறது. பிறகு பொய்யின் ஆதரவு தேடப்படுகிறது. இவ்வாறு தொடர்கிறது. இது முடிவடையாத தொடராகும். எவ்வாறிருப்பினும் அல்லாஹ் இங்கு கணவன் மனைவி தொடர்பில் எந்த அளவுக்கு உண்மையின் தரத்தை விளக்கினானோ அதில் எந்தக் குறைவும் வைக்கக் கூடாது. உண்மையின் மிக உயரிய தரம் இருக்க வேண்டும். இதனால் உங்கள் தொடர்புகள் மகிழ்ச்சியாக இருக்கிற அதே வேளையில் உங்களது சந்ததிகளும் பல பிரச்சனைகளிலிருந்து தப்பிப்பார்கள். பிறகு ஃபவ்ஸே அழீம் என்ற பெரும் வெற்றியை அல்லாஹ் வழங்குவான். இந்த அழகிய கட்டளைதான் இஸ்லாத்தின் கட்டளையாகும். ஆனால் இதற்குப் பிறகும் கவ்லே சதீத் – நேரான வார்த்தையைப் பயன்படுத்தாமல் தமது உறவுகளை தடம் புரளச் செய்கின்றனர். தமது நம்பகத் தன்மையை பொய்யின் காரணத்தால் நிலைக்க விடுவதில்லை. இத்தகையவரை விட அதிகமான பேறிழந்தவர் யார் இருக்க முடியும்?

நம்மிடையிலும் கூட குலா, தலாக் விவகாரம் அதிகமாகக் காரணம் அல்லாஹ்வுடைய கட்டளையை விட்டு விலகியதனால் ஆகும். இந்த உலகியல்வாதி –களுக்கு எந்த வழிகாட்டலும் இல்லை. கணவன் மனைவி இடையே உள்ள பொய்ப் பரிமாற்றத்தை அவர்களும் கூட Serious Lie (தீவிரமான பொய்) என்று எழுதியுள்ளனர். பெரிய பொய் கவலைப்பட வேண்டிய பொய் என்கின்றனர். ஆனால் எவர்களுக்கு வழிகாட்டி இருந்தும் அவ்வாறு செய்வார்களோ அங்கு அது அதிக தீவிரமான விஷயம் ஆகி விடுகிறது. அதை விட அதிகம் அபாயகரமான விஷயமாகி விடுகிறது. ஏனெனில் அத்தகையோர் அல்லாஹ்வுடைய கட்டளைக்குக் கட்டுப்படுவதில்லை. பிறகு அத்தகையோர் தமது பாவத்திற்கு மன்னிப்புக் கேட்பதிலிருந்தும் விலகி விடுவர். அல்லாஹ்வின் தரப்பிலிருந்து தரப்பட்ட வெற்றியின் வாக்குறுதியிலிருந்தும் விலக்கப்பட்டு விடுவார். எனவே அத்தகைய நடவடிக்கை உள்ளவர் மிகவும் கவலைப்பட வேண்டிய விஷயமாகும்.

மேலும் அதில் எழுதியுள்ளார்: மக்கள் பொதுவாக பொய் கூறுகிறார்கள். தமது தவறை மறைப்பதற்காக கூறுகிறார்கள். மிக அதிக சதவீதம் இத்தகைய பிரிவினர்தான். மக்களை எதிர்கொள்வதிலிருந்து தப்பிப்பதற்காக மக்களை சந்திக்க விரும்புவதில்லை. உடனே மனைவி மக்களிடம் தாம் வீட்டில் இல்லை என்று கூறச் சொல்கிறார்கள். தமது பிள்ளைகளிடம் கூறுகிறார்கள். வரக்கூடியவரிடம் அல்லது ஃபோன் செய்பவரிடம் எனது தந்தையார் வீட்டில் இல்லை ஒன்று கூறச் சொல்கிறார்கள். தமது பிள்ளைகளிடம் கூறுகிறார்கள். வரக்கூடியவரிடம் அல்லது ஃபோன் செய்பவரிடம் எனது தந்தையார் வீட்டில் இல்லை அல்லது தாயார் வீட்டில் இல்லை என்று கூறுமாறு சொல்லி விடுகிறார்கள் இவ்வாறு பிள்ளைகளிடமும் பொய்யின் வழக்கத்தை ஏற்படுத்துகிறார்கள். ஆகவே பொய் ஒருவரது இயல்பில் உள்ளதல்ல. மாறாக சில பெரியவர்களின் செயல்கள் பிள்ளைகளையும் பொய்யின் பக்கம் எடுத்துச் செல்கிறது.

பிறகு அவர் எழுதுகிறார்: 'சிலர் எந்த தூண்டுதலும் இல்லாமலேயே பழக்கத்தின் காரணமாகவே பொய் கூறுகின்றனர்'. பழக்கமும் கூட சுற்றுச் சூழலின் தாக்கத்தால்தான் ஏற்படுகிறது.

பிறகு அவர் எழுதுகிறார். 'உண்மையைப் புறக்கணிப்பதற்காக பொய் சொல்கின்றனர்'. அதாவது உண்மையான காரணத்தைச் சொல்லாமல் மறைப்பதற்காகப் பொய் சொல்கின்றனர். மற்றவருக்கு நஷ்டம் விளைவிப்பதற்காகப் பொய் சொல்கின்றனர். நல்லவராகக் காட்டுவதற்காகப் பொய் சொல்கின்றனர். மக்களை சிரிக்க வைப்பதற்காக பொய் சொல்கின்றனர். மக்களுக்கு நகைச்சுவையாக பொய் கூறி சிரிக்க வைக்கின்றனர். ஆனால் தூய்மையான சுத்தமான நகைச்சுவைகளைக் கூறலாம். பிறகு சுயநலனிற்காகப் பொய் சொல்கின்றனர். பொருளாதார ரீதியாக நேர்மறையான எதிர் மறையான விளைவுகளைக் கருத்தில் கொண்டு பொய் சொல்லப்படுகிறது. பொருளாதார இலாப நோக்கில் பொய் சொல்லப்படுகிறது. இந்த சர்வே பொய் சொல்பவரின் எல்லா வகையையும் விகிதாச்சாரமாக எடுத்துக் கூறியுள்ளது. இதில் தவறை மறைப்பவர் பொருளாதார இலாபத்திற்காக பொய் சொல்பவர் மற்றும் பல்வேறு இலாப நோக்கிலும் மக்களிடமிருந்து தப்பிக்கவும், சந்திக்காமல் இருக்கவும் ஏதாவது தவறு செய்து விட்டு தப்பித்துக் கொள்ளவும் பொய் சொல்கிறார்கள். எல்லா வகையான பொய்களை விடவும் அதிகமான விகிதாச்சாரத்தில் பொய் கூறுபவர் இந்த நான்கு வகையினர் ஆவர். ஒன்று – தவறுகளை மறைத்தல், இரண்டு – பொருளாதார இலாபம், மூன்று – மாற்ற இலாபங்கள், நான்கு – மக்களிடம் இருந்து தப்பித்தல் என்று இவர் கூறுகிறார். (National Geographic June 2017, Why we lie? Page 35-51)

இதுவே இம்மக்களின் நிலையாகும். நம்மில் பலர் இவர்களது உண்மையின் தரம் நம்மை விட மேம்பட்டுள்ளது என்று கருதுகிறார்கள். ஆனால் இவர்கள்தான் நமது உண்மைக்கான அளவுகோல் எனில் பிறகு இது நம்பிக்கை கொண்டவர் என்று அழைக்கப்படுபவர் கவலைப்பட வேண்டிய இடமாகும். இவர்கள் இறைவனையும் ஏற்றுக் கொள்வதில்லை. அல்லது இணை வைப்பவர்கள் நாமோ ஈமான் கொண்டிருப்பதாக வாதம் செய்பவர்கள். மார்க்கத்தின் போதனையின்படி செயல்படுவதாக வாதிக்கிறோம். அவர்கள் உண்மையிலிருந்து விலகுவார்கள் எனில் அவர்கள் மார்க்கத்திலிருந்து விலகுவது மட்டுமின்றி இணை வைப்பாலும்


**திருக்குர்ஆனிலிருந்து...**

*தொழுகையை நிலைநாட்டுங்கள். ஸக்காத்தைக் கொடுங்கள். நீங்கள் உங்களுக்காக முன் கூட்டியே அனுப்பும் நன்மையையே நீங்கள் அல்லாஹ்விடம் பெற்றுக் கொள்வீர்கள். நிச்சயமாக அல்லாஹ் உங்கள் செயல்களைப் பார்ப்பவனாவான். (2:111)*

**முஹம்மது ஹுஸைன்**

பழனி

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*உலகப்பற்று கலவாத, வஞ்சகமோ கோழைத்தனமோ கலவாத, கட்டுப்பாட்டின் எத்தகுதியினையும் இழக்காத நம்பிக்கையைக் கொண்டவர்கள் இறைவனின் விருப்பத்திற்குரியோர் ஆவர். மேலும் அவர்களே உண்மையான பாதையில் செல்பவராவார்.*

**மர்ஹூமா நதீரா பேகம்**

மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*ஒவ்வொருவருக்கும் ஒரு குறிக்கோள் உள்ளது. அவர் அதனிடத்துத் தமது முழுக் கவனத்தையும் செலுத்துகிறார். எனவே நீங்கள் நல்லவற்றில் ஒருவரையொருவர் முந்திக்கொள்ள முயலுங்கள். நீங்கள் எங்கிருந்தாலும், அல்லாஹ் உங்களை ஒன்று சேர்ப்பான்...... (2:149)*

**மர்ஹூம் முஹம்மது யூசுஃப்**

மற்றும் குடும்பத்தினர், உடன்குடி.

பீடிக்கப்படுவர். எனவே நாம் நமது உண்மையின் தரத்தை பரிசீலிக்க வேண்டும். அதன் மீது பார்வையைச் செலுத்துவது அவசியமாகும்.

அல்லாஹ் சாட்சியளிப்பது பற்றி கூறுகிறான். பொய்யான சாட்சி கூறாதீர்கள். இந்த வகையில் அளவற்ற அருளாளனின் அடியார்களைப் பற்றி கூறுகின்றான். وَالَّذِيْنَ لَا يَشْهَدُوْنَ الزُّوْرَ அவர்கள் பொய் சாட்சி கூறமாட்டார்கள். **(25:73)** ஆகவே நமது சாட்சி, பொருளாதார இலாப நோக்கிலோ, பிற பயனுக்ககவோ அல்லது வேறு நோக்கத்திற்காகவோ பொய்யானதாக இருக்கக் கூடாது. நாம் ரஹ்மானாகிய இறைவனின் அடியாராக விரும்பினால் ஈமானில் மேம்பட விரும்பினால் இந்த பொய்களிலிருந்து விலக வேண்டும். இன்னும் சொல்வதாயின், ஷய்த்தானிடமிருந்து தப்பிப்பதும் அவசியமாகும். பொய் சொல்வதால் ரஹ்மானாகிய இறைவனுடன் தொடர்பு துண்டிக்கப்படும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: இறைவனுடன் தொடர்பு துண்டிக்கப்பட்டு விட்டால் பிறகு ஷய்த்தானுடன் தொடர்பு நிலைபெற்று விடும். ஷய்த்தானின் பிடியில் மனிதன் வந்து விடுவான். (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 12)

நமது உண்மையின் தரம் எவ்வாறிருக்க வேண்டும்? எவ்வாறு பொய்யிலிருந்து தப்பிப்பது? ஆகியவற்றை விளக்கியவாறு ஓரிடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: நீங்கள் இரத்தம் சிந்தாதீர்கள் என்று கூற வேண்டிய தேவை இப்போது இல்லை. ஏனெனில் மிகவும் கொடிய விஷமிகளைத் தவிர வேறு எவர் அநியாயமாக இரத்தம் சிந்துவார்? அவர் அவர் எவரையும் கொலை செய்ய மாட்டார். மாறாக, நான் கூறுகிறேன். நீதிக்கு மாற்றமான விஷயத்தில் பிடிவாதமாக நின்று உண்மையை கொலை செய்யாதீர்கள். உண்மையை ஒப்புக் கொள்ளுங்கள். குழந்தைகளிடம் அல்லது எதிரியிடமிருந்து உண்மையை பெற்றாலும் கூட உடனே உங்கள் வறட்டு வாதங்களை விட்டு விடுங்கள். சிறு குழந்தை உண்மையைக் கூறினாலும் ஏற்றுக் கொள்ள வேண்டும். பிடிவாதம் பிடிக்கக் கூடாது.

அவர்கள் கூறுகிறார்கள்: அல்லாஹ் கூறுவது போன்று فَاجْتَنِبُوا الرِّجْسَ مِنَ الْاَوْثَانِ وَاجْتَنِبُوْا قَوْلَ الزُّوْرِ அதாவது சிலைகளின் தீமைகளிலிருந்து தப்பியுங்கள். பொய்யிலிருந்தும் விலகுங்கள். **(22:31)** அது சிலையை விட குறைந்ததல்ல.

அவர்கள் கூறுகிறார்கள்: எந்தவொரு பொருள் உங்களை உண்மையை விட்டு வேறொருபுறம் திருப்பிக் கொண்டு செல்கிறதோ அது உங்கள் வழியில் சிலையாகும். உண்மையான சாட்சியம் கூறுங்கள். அது உங்கள் தந்தை அல்லது சகோதரர் அல்லது நண்பர்களுக்கு எதிராக இருப்பினும் சரியே. எந்த பகைமையும் உங்களை நீதியிலிருந்து அகற்ற வேண்டாம். (இஸாலே அவ்ஹாம். ரூஹானி கஸாயின் தொகுதி 3 பக்கம் 550) நீதியிலிருந்து விலகினீர்கள் என்றால் அது பொய்யாகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூன்று இடத்தில் பொய் சொல்வதற்கு அனுமதி வழங்கியுள்ளார்கள் என்று ஒரு கிறித்தவர் ஆட்சேபனை செய்தார். ஒருவர் தமது மார்க்கத்தை மறைப்பதற்காக பொய் சொல்லுங்கள் என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அதே வேளையில் இஞ்சீலில் இதுபோன்ற எந்த அனுமதியும் இல்லை என்று அவர் ஆட்சேபனை செய்தார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: நேர்மையில் உறுதியைப் பேணுவதற்காக திருக்குர்ஆனில் எந்த அளவுக்கு தெளிவாக கவனமூட்டப்பட்டுள்ளதோ அதில் பத்தில் ஒரு பங்கு கூட இஞ்சீலில் கூறப்பட்டிருக்கும் என்று நான் ஒருபோதும் நம்ப முடியாது.

அன்னார் கூறுகிறார்கள்: திருக்குர்ஆனில் பொய் பேசுவதை சிலை வணக்கத்திற்கு சமமாகக் கூறப்பட்டுள்ளது. அல்லாஹ் கூறுவதைப் போன்று, فَاجْتَنِبُوا الرِّجْسَ مِنَ الْاَوْثَانِ وَاجْتَنِبُوْا قَوْلَ الزُّوْرِ சிலைகளின் அசுத்தங்கள் மற்றும் பொய்யின் அசுத்தங்களிலிருந்து விலகுங்கள். **(22:31)**

பிறகு ஓரிடத்தில் கூறுகிறான்:

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا كُوْنُوْا قَوّٰمِيْنَ بِالْقِسْطِ شُهَدَآءَ لِلّٰهِ
وَلَوْ عَلٰۤى اَنْفُسِكُمْ اَوِ الْوَالِدَيْنِ وَالْاَقْرَبِيْنَ

அதாவது ஈமான் கொண்டவர்களே! ஈமான் மற்றும் நேர்மையில் நிலைத்திருங்கள். உண்மையான சாட்சியை அல்லாஹ்வுக்காக கூறுங்கள். உங்கள் உயிருக்கே கேடு ஏற்பட்டாலும் சரியே. உங்கள் தாய் தந்தையர் உங்கள் உறவினர்கள் உங்கள் சாட்சியத் –தால் நஷ்டத்திற்குள்ளானாலும் சரியே. **(4:136)** (நூருல் குர்ஆன் எண்.2, ரூஹானீ கஸாயின் தொகுதி 9 பக்கம் 402-403)

ஆகவே இதுவே உண்மையின் தரமாகும். நிச்சயமாக இதுவே நேர்மையின் தரமும் ஆகும். ஆனால் உண்மை இல்லாமல் இந்த நீதியை நிலைநாட்ட முடியாது. ஆகவே இந்த தரத்தை நிலைநாட்டுவது ஒரு நம்பிக்கை கொண்டவருக்கு அவசியமானதாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இதனை மேலும் விளக்கியவாறு ஓரிடத்தில் கூறுகிறார்கள்: இறைவன் நேர்மையைப் பற்றி முழுமையாக உண்மையின் மீது காலெடுத்து வைக்காமல் அதனை கடைபிடிக்க முடியாது என்று கூறுகிறான். ஹுவ அக்ரபு லித்தக்வா – இதுவே இறையச்சத்திற்குமிக அருகிலுள்ள செயலாகும். ஒரு சமுதாயத்தின் மீது கொண்ட பகைமை உங்களை நீதியுடன் நடக்காமல் செய்து விட வேண்டாம்.

அவர்கள் கூறுகிறார்கள்: நீதியில் நிலை நில்லுங்கள். அதில்தான் தக்வா உள்ளது. அவர்கள் கூறுகிறார்கள்: உங்களுக்கு தெரியும். எந்தவொரு சமுதாயம் அநீதியான முறையில் துன்பம் கொடுக்கவும், துக்கம் தரவும், இரத்தம் சிந்தவும், பின்தொடரவும், குழந்தைகளைக் கொல்லவும் செய்து, மக்காவின் காஃபிர்களைப் போன்று நடந்தால், இந்த சண்டைகளிலிருந்து திரும்பா விட்டால் மக்களுடைய விவகாரங்களில் நீதியுடன் நடப்பது எவ்வளவு கஷ்டமாகி விடும். ஆனால் திருக்குர்ஆன் உயிர் பகைவர்களின் உரிமையைக் கூட வீணாக்கவில்லை. நீதி, நேர்மையைப் போதித்துள்ளது.

அவர்கள் கூறுகிறார்கள்: நான் உண்மையாகவே கூறுகிறேன். எதிரிகளுடன் நேசமுடையவராக நடப்பது எளிது. எதிரிகளின் உரிமையை பாதுகாப்பது, வழக்குகளில் நீதி நேர்மையை கை விடாமல் இருப்பது மிகவும் சிரமமானது. குறிப்பாக இது ஆண் மகனால் செய்ய இயலும் வேலையாகும். பெரும்பாலான மக்கள் தமக்கு இணையாக எதிரிகளின் மீது அன்பு காட்டுகின்றனர். அவர்களுடன் இனிக்க இனிக்க பேசவும் செய்கின்றனர். ஆனால் அவர்களின் உரிமையை அழித்து விடுவதற்காக பொய் சொல்கின்றனர். நேர்மையைப் பயன்படுத்துவதில்லை. பொய் சொல்லி விடுகின்றனர்.

அவர்கள் கூறுகிறார்கள்: ஒரு சகோதரர் தமது பிற சகோதரர் மீது அன்பு செலுத்துகிறார். அன்பின் போர்வையில் வைத்து ஏமாற்றி அவரது உரிமையைப் பறித்து விடுகிறார். இதற்கு உதாரணம் தருகிறார்கள். ஒரு பொறுப்பாளர், தமது தந்திரத்தால் பெயர்களைப் பத்திரங்களில் எழுதுவதில்லை. அரசாங்கத்தின் சட்டப்படி எழுத வேண்டியதை எழுதவில்லை. ஆனால் அன்பிலோ அவர்களின் மீது மாய்வதைப் போல் நடிக்கின்றனர். பொய்யான முறையில் சிலர் உறவினர்களின் பத்திரங்களை மாற்றி விடுகின்றனர். பெயரை எழுதாமல் விட்டு விடுகின்றனர். சரியான சாட்சி கூறுவதில்லை. அதனால் அவர்களுக்கு பொருளாதார நஷ்டத்தை சந்திக்க நேரிடுகிறது.

அன்னார் கூறுகிறார்கள்: அல்லாஹ் இந்த வசனத்தில் நேசத்தைப் பற்றி குறிப்பிடவில்லை. மாறாக, நேசத்தின் தரம் பற்றி குறிப்பிட்டுள்ளான். எவர் தனது உயிர் பகைவருடன் நீதியாக நடப்பாரோ உண்மை மற்றும் நேர்மையிலிருந்து விலகாமல் இருப்பாரோ அவரே உண்மையான அன்பும் செலுத்துவார். (நூருல் குர்ஆன் எண்.2, ரூஹானீ கஸாயின் தொகுதி 9 பக்கம் 409-410) ஆகவே இதுவே தரம் ஆகும். இது வெறும் தற்காலிக பயனுக்காக அல்ல. அன்றாட சமூக விவகாரங்களில் மட்டுமல்ல. மாறாக, ஒரு நம்பிக்கை கொண்டவரின் உண்மையின் தரம் எப்படி இருக்கும் என்றால் ஒரு எதிரிக்கு நஷ்டம் ஏற்படுத்துவதற்காகக் கூட பொய் சொல்லக் கூடாது. எதிரியுடன் இப்படிப்பட்ட தரத்துடம் இருப்பார் எனில்

**திருக்குர்ஆனிலிருந்து...**

*உம்முடைய இறைவன், தான் விரும்புபவருக்கு உணவைத் தாராளமாக வழங்குகின்றான். மேலும், (தான் விரும்புபவருக்கு அவற்றைக்) குறைவாகக் கொடுக்கின்றான். நிச்சயமாக, அவன் தன் அடியார்களை நன்கு அறிந்து கொள்பவனும், நன்கு பார்ப்பவனும் ஆவான். (17:31)*

**முஹம்மது ஆதில்**

சத்ர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், சூலூர்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*இறைவன் உங்களை வீணாக்கி விடுவான் என நீங்கள் ஒருபோதும் கருத வேண்டாம். நீங்கள் உண்மையில் இறைவன் தன் கரத்தினால் மண்ணில் விதைத்த விதையே. இறைவனின் இந்த விதை முளைக்கும்; பூக்கும்.... பின்னர் வலுவானதொரு மரமாகி விடும் என்று கூறியுள்ளான்.*

**அட்வகேட் ஸலீம் அஹ்மது**

மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*நீங்கள் அளந்து கொடுக்கும்போது, அளவை முழுமையாகக் கொடுங்கள். (நீங்கள் நிறுத்துக் கொடுத்தாலும்) சரியான தராசு கொண்டு நிறுத்துக் கொடுங்கள். இவ்வாறு செய்வது மிக்க நல்லதும், முடிவைப் பொருத்தவரை மிகச் சிறந்ததுமாகும். (17:36)*

**M.Y. ஷாஹுல் ஹமீது**

மற்றும் குடும்பத்தினர், திருச்சி.

பரஸ்பரம் ஒருவர் மற்றவருடன் உள்ள தொடர்பில் உண்மையின் தரம் அதிகமாகின்ற காரணத்தால் அன்பும் அதிகமாகும். அன்பிலும் பொய் இருக்காது. ஒருவர் மீது அன்பும் வைத்துக் கொண்டு அவரிடம் பொய்யும் சொல்வது நடக்க முடியாது. ஏனெனில் அன்பு தன்னை அறியாமல் வருகிறது. இந்த தகுதியைப் பெற முயற்சி செய்ய வேண்டும். பிறகு உண்மையின் தகுதி எப்படி இருக்கும் எனில் தமது சகோதரரை மனிதன் ஏமாற்ற இயலாது.

உண்மையின் முக்கியத்தவத்தைக் கூறியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகிறார்கள்: ஹராமான உணவானது பொய் பேசுதலை விட அதிக நஷ்டத்தை ஏற்படுத்தி விடாது. இதனை வைத்து ஹராமான உணவு நல்லது என்று யாரும் கருதிக் கொண்டு அமர்ந்து விட வேண்டும். அது மிகவும் தவறாகும்.

அவர்கள் கூறுகிறார்கள்: நான் கூறுவதன் பொருள் என்னவென்றால், ஒரு மனிதர் நிர்பந்தத்திற்காக பன்றி மாமிசம் உண்பது வேறு விஷயம். ஆனால் அவர் தனது நாவினால் பன்றிக்காக மார்க்கத் தீர்ப்பு வழங்கினால் அவர் இஸ்லாத்தை விட்டு தொலைவில் சென்று விடுவார். நிர்பந்தமான நிலையில் ஒருவர் பன்றியின் மாமிசம் உண்ண வேண்டியது வந்தால் உண்ணலாம். அது வேறு விஷயம். ஆனால் பன்றி மாமிசம் உண்பது அனுமதிக்கப்பட்டது என்று மார்க்கத் தீர்ப்பு வழங்குவது மனிதனை இஸ்லாத்தை விட தூர விலக்கி விடுகிறது. இவ்வாறு மனிதன் அல்லாஹ் விலக்கி வைத்ததை ஆகுமானதாக்குகிறான்.

சுருக்கமாக இதிலிருந்து தெரிய வருவதாவது, நாவைப் பேணாமல் இருப்பது ஆபத்தானதாகும். எனவே ஓர் இறையச்சமுள்ள மனிதர் தனது நாவை மிகவும் கட்டுப்படுத்தி வைக்கிறார். அவரது வாயிலிருந்து தக்வாவிற்கு மாற்றமான எந்த சொல்லும் வெளி வராது. ஆகவே நீங்கள் உங்கள் நாவுகளின் மீது ஆட்சி செலுத்துங்கள். நாவு உங்கள் மீது ஆதிக்கம் செலுத்தக் கூடாது. (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 423; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) மனிதனுக்கு தனது நாவின் மீது கட்டுப்பாடு இருக்க வேண்டும். இதுவே நாவின் மீது ஆட்சி செலுத்துவதாகும். மாறாக நாவில் என்ன வந்ததோ அதனை பேசி விடக் கூடாது. பிறகு அதில் உண்மை பொய் எல்லாம் வெளி வந்து விடும் என்பது இயல்பானதாகும். பிறகு அதனால் குழப்பம் ஏற்படுகிறது.

பிறகு எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். நமது நாவு எப்போதும் உண்மையின் எத்தகைய தரத்துடன் விளங்க வேண்டும் என்றால் அது இணை வைப்பிலிருந்து மட்டும் பாதுகாப்பாக இருக்க வேண்டும். பொய்யில் கலந்து இருப்பவர்களின் பல்வேறு நிலைகளை நான் இந்த தலைப்பினை அடிப்படையாகக் கொண்டு விளக்கினேன். அதனை கவனத்தில் வைத்து ஒவ்வொருவரும் தம்மை ஆய்வு செய்வது அவசியமாகும். நாம் எந்த வகை பொய்யிலும் கலந்து இருக்கவில்லையே? என்று பார்க்க வேண்டும். அவ்வாறு கலந்திருந்தால் எவ்வாறு ஈடேற்றம் பெறுவது? அதற்கான வழிமுறையை அல்லாஹ் கூறி விட்டான். அல்லாஹ் எல்லாருக்கும் இதனை புரிந்து கொள்ள வாய்ப்பு வழங்குவானாக. உண்மைக்கும் மேல் கவ்லே சதீது – நேரான பேச்சில் நிலைத்திருக்க வாய்ப்பு வழங்குவானாக.

பிறகு நம்பிக்கை கொண்டவரின் நல்லொழுக்கமாக இருக்க வேண்டிய இறை நெருக்கத்தைப் பெற்றுத் தருகிற இன்னொரு முக்கியமான ஒரு பண்பு பணிவு மற்றும் அகம்பாவத்திலிருந்து விலகுதல் ஆகும். இந்த வகையில் அல்லாஹ் பெருமை கொண்டவர்களைப் பற்றி ஓரிடத்தில் கூறுகிறான்:

وَلَا تُصَعِّرْ خَدَّكَ لِلنَّاسِ وَلَا تَمْشِ فِي الْأَرْضِ مَرَحًا إِنَّ اللّٰهَ لَا يُحِبُّ كُلَّ مُخْتَالٍ فَخُوْرٍ

கர்வத்தால் உமது கன்னத்தை பொங்கச் செய்யாதே. பூமியில் ஆணவத்துடன் அலையாதே. அல்லாஹ் எந்த பெருமையடிக்கும் ஆணவம் கொண்டவனையும் விரும்புவதில்லை. (31:19)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த கருத்தை பல இடங்களில் விளக்கியுள்ளார்கள். அன்னார் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: நபிமார்களை விட இம்மக்கள் கோடிக்கணக்கான மடங்கு கீழே இருக்கிறார்கள். நபிமார்களுடன் அவர்களை ஒப்பிடவே முடியாது. அவர்கள் ஓரிரு நாள் தொழுது விட்டு பெருமையடிக்க ஆரம்பித்து விடுகிறார்கள். அவ்வாறே நோன்பு, ஹஜ் மூலமாகவும் மனத்தூய்மை பெறுவதற்குப் பதில் பெருமையும் காட்டுதலும் உருவாகிறது. இக்காலத்திலும் கூட ரமலானில் வாய்ப்பு கிடைக்கும்போது இறைவணக்கம் செய்கின்றனர். ஏதாவது நல்ல கனவு கண்டு விட்டாலோ அளவற்ற பெருமை கொள்ள ஆரம்பித்து விடுகிறார்கள். அதிலிருந்தும் விலக வேண்டும். இஸ்திக்ஃபார் செய்ய வேண்டும். நினைவில் கொள்ளுங்கள். தற்பெருமை ஷய்த்தானிடம் இருந்து வந்துள்ளது. ஷய்த்தானாகவும் ஆக்கி விடுகிறது. எதுவரை மனிதன் அதிலிருந்து விலகுவதில்லையோ உண்மையை ஏற்பதிலும், இறை சன்னிதானத்தில் இருந்து அருளைப் பெறுவதிலும் ஒரு தடை ஏற்பட்டு விடுகிறது. எவ்வகையிலும் கர்வம் கூடாது. அறிவு ரீதியாகவோ செல்வத்தின் அடிப்படையிலோ அழகு, குலம், கோத்திரம், குடும்பம், பாரம்பரியம், சந்ததிகள் காரணமாக பெருமை உருவாகிறது. எதுரை மனிதன் இதுபோன்ற கர்வங்களிலிருந்து தம்மை தூய்மைப் –படுத்தவில்லையோ அதுவரை அவர் இறைவனது பார்வையில் தேர்ந்தெடுக்கப்பட்டவராக ஆக முடியாது. எந்த இறைஞானம் உணர்வுகளின் அசுத்தமான –வற்றை அழிக்கக் கூடியதோ அது அவருக்கு வழங்கப்பட மாட்டாது. மனிதன் கர்வத்தில் இருந்து விலகாதவரை பணிவை மேற்கொள்ளாதவரை அந்த இறைஞானம் அவருக்குக் கிடைக்காது.

அவர்கள் கூறுகிறார்கள்: ஏனெனில் அது ஷய்த்தானுக்குரிய இயல்பில் உள்ளதாகும். அதனை அல்லாஹ் விரும்புவதில்லை. ஷய்த்தான்தான் கர்வம் கொண்டான். ஆதமை விட தன்னைப் பெரியவனாகக் கருதினான். (7:13) أَنَا خَيْرٌ مِّنْهُ خَلَقْتَنِي مِن نَّارٍ وَخَلَقْتَهُ مِن طِينٍ என்று கூறினான். பிறகு இதன் விளைவு என்ன –வென்றால் அவன் இறைவனின் சன்னிதானத்தில் இருந்து தள்ளப்பட்டவன் ஆகி விட்டான். ஆதம் மன்னிப்பு கேட்டார். ஏனெனில் அவருக்கு இறை ஞானம் கிடைத்திருந்தது. உடனே தனது பலவீனத்தை ஒப்புக் கொண்டார். பிறகு இறைவனது அருளுக்கு வாரிசானார். இறைவனின் அருள் இன்றி எதுவும் நடக்காது என்று அவர் அறிந்திருந்தார். எனவே துஆ செய்தார். (7:124) رَبَّنَا ظَلَمْنَا أَنفُسَنَا وَإِن لَّمْ تَغْفِرْ لَنَا وَتَرْحَمْنَا لَنَكُونَنَّ مِنَ الْخَاسِرِينَ இந்த துஆவை ஓதி வருமாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஜமாஅத்திற்கு போதனை வழங்கியுள்ளார்கள்.

நாம் இப்போது கடைசி பத்தில் நுழைகிறோம். நரகத்திலிருந்து தப்பிக்கவும், ரஹ்மத்தை வேண்டியும் இந்த துஆவை அதிகமாக செய்வது அவசியமாகும். ஹுஸூர் (அலை) அவர்கள் தொடர்ந்து கூறுகிறார்கள்: ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களிடம், 'நல்ல போதகரே!' என்று கூறப்பட்ட போது, அவர் 'என்னை நல்லவன் என்று கூறுவானேன்' என்று கேட்டார். இதன் இரகசியம் இதுவாகும். இக்கால அறிவற்ற கிறித்தவர்கள், இதன் பொருள்: 'என்னை ஆண்டவரே என்று ஏன் கூறவில்லை?' என்று கேட்டார் என்கின்றனர். ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கள் மிகவும் ஞானமிக்க சொற்களை கூறியிருந்தார்கள். அது ஹஸ்ரத் அன்பியா அலைஹிமுஸ் ஸலாம் உடைய சிறப்பான இயல்பாகும். உண்மையான நன்மை இறைவனிடமிருந்து வருகிறது என்பதை அவர் அறிந்திருந்தார். அவனே அதன் ஊற்றாவான். அவனிடம் இருந்தே அது இறங்குகிறது. அவன் விரும்புபவருக்கு வழங்குகிறான். விரும்பும்போது எடுத்து விடுகிறான். ஆனால் இந்த அறிவற்றவர்கள் மிகச் சிறந்த ஒரு கருத்தை தவறானதாக்கி விட்டனர். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை அகம்பாவம் கொண்டவராக நிரூபித்து விட்டனர். ஆனால் அவரோ மிகவும் எளிய குணம் படைத்த மனிதராக இருந்தார்.

தூய்மையாகும் ஒரு வழிமுறையை ஹுஸூர் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்: தூய்மை ஆவதற்கு என் கருத்தின்படி மிகச் சிறந்த வழி இதனை விட வேறு ஒரு சிறந்த வழி கிடைப்பது சாத்தியமே இல்லை. அது மனிதன் எந்த வகையான அகம்பாவமும் பெருமையும் கொள்ளாமல் இருப்பதாகும். தூய்மையாக வேண்டும் என்றால்


**திருக்குர்ஆனிலிருந்து...**

*(செவியேற்பவரே!) உமக்கு எதனைப் பற்றிய அறிவு இல்லையோ, அதனைப் பின்பற்றாதீர். (ஏனென்றால்) காது, கண், மனம் இவை எல்லாவற்றையும் குறித்து (உம்மிடம்) விசாரிக்கப்படும். (17:37)*

**ஜோதி அஸ்டின்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.



**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*எவர்கள் அந்த இறைவன் மீதுள்ள பேரன்பிலும் நேசத்திலும் தங்களை மாய்த்துக் கொள்கின் –றனரோ, மேலும் சுயமே தாங்கள் இருப்பது போன்றே அவனது ஏகத்துவம் மற்றும் கம்பீரம் வெளிப்பட வேண்டும் என்று விரும்புகின்றவர் –களாக இருக்கின்றனரோ அவர்களை தவிர வேறு எவருக்காகவும் இறைவன் தனது மகத்தான அடையாளங்களை வெளிப்படுத்துவதில்லை.....*

**மர்ஹூம் ஷேக் அப்துல் காதிர்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.



**திருக்குர்ஆனிலிருந்து...**

*பூமியில் ஆணவங்கொண்டு நடக்காதீர். ஏனென்றால், இதனால் நாட்டின் எல்லையையும், உம்மால் அடைந்து விட முடியாது. (இவ்வாறு செய்வதனால் சமுதாயத்) தலைவர்களது உயர்ந்த அந்தஸ்தையும் உம்மால் பெற்று விட முடியாது. (17:38)*

**அன்னல் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

எவ்வகை பெருமையும் கொள்ளாதீர்கள். அறிவிப்பூர்வமாகவோ, குடும்பப்பூர்வமாகவோ, பொருளாதார ரீதியாகவோ பெருமை கொள்ளா –தீர்கள். அல்லாஹ் ஒருவருக்கு கண்ணைக் கொடுத்தால் அவர் பார்க்கிறார். இந்த இருளிலிருந்து ஒளியை வழங்குகிற ஒவ்வோர் ஒளியும் வானத்தில் இருந்தே வருகிறது. மனிதன் எப்போதும் வானத்தின் ஒளியின் தேவையுள்ளவனாவான். வானத்திலிருந்து வருகிற சூரிய ஒளியின்றி கண்ணும் காண இயலாது. அதுபோன்று ஒவ்வோர் இருளையும் அகற்றுகிறதும் அந்தரங்க ஒளி இறையச்சம் மற்றும் தூய்மையின் ஒளியை வழங்குகின்ற அவ்வொளியும் வானத்தில் இருந்துதான் வருகிறது. நான் உண்மையாகவே கூறுகிறேன். மனிதனது தக்வா, ஈமான், இறைவணக்கம், தூய்மை அனைத்தும் வானத்தில் இருந்துதான் வருகிறது. அது இறை அருளினைச் சார்ந்தது. அவன் விரும்புபவரிடம் அதனை நிலைநாட்டுகிறான். அவன் விரும்பினால் அகற்றியும் விடலாம்.

பிறகு அன்னார் கூறுகிறார்கள்: உண்மையான மஃரிஃபத் என்பது ஒருவர் தமது நஃப்ஸை அழிந்ததும், ஒன்றுமற்றதும் ஆக கருதுவதாகும். இறைசன்னிதானத்தில் வீழ்ந்து பணிவுடன் இறை அருளை வேண்ட வேண்டும். மனித நஃப்ஸை எரித்து விடுகிற அந்த இறை ஞான ஒளியை வேண்டுங்கள். இறைவனே உள்ளினுள் ஒவ்வொரு நன்மையைக் குறித்தும் ஓர் வெளிச்சத்தையும் சூட்டையும் உருவாக்கித் தருகிறான். பிறகு அவனது அருளால் இதில் பங்கு கிடைத்து விட்டால் ஏதாவது ஒரு வேளையில் ஒருவகை நெகிழ்வும், உள்ள விரிவும் கிடைத்து விட்டால், அதில் ஒருபோதும் பெருமை கொள்ள வேண்டாம். அல்லாஹ்வுடன் தொடர்பு ஏற்பட்டு விட்டால் துஆவின் கபூலிய்யத்தை பார்த்து விட்டால், உள்ளத்தில் சிறப்பான நிறைவு ஏற்பட்டு விட்டால் பிறகு அதில் பெருமையோ பெருமிதமோ கொள்ளாதீர்கள். மாறாக, பணிவு உருக்கத்தில் இன்னும் அதிகமாக முன்னேறுங்கள். இந்த தொடர்பின் காரணமாக அல்லாஹ்வின் அருளிற்காகவும் மேலும் பணிவில் முன்னேறுங்கள். ஏனெனில் எந்த அளவுக்கு உங்களை ஒன்றுமற்றதாகக் கருதுவீர்களோ அதே அளவுக்கு தகுதிகளும் ஒளிகளும் இறைவனிடம் இருந்து இறங்கும். அவை அவருக்கு ஒளியையும் ஆற்றலையும் வழங்கும். ஒருவன் இந்தக் கொள்கையை கைக்கொண்டால் அல்லாஹ்வின் அருளால் அவனது நல்லொழுக்க நிலை மிகச் சிறந்ததாக ஆகி விடும் என நம்பலாம். உலகில் தம்மை ஒரு பொருட்டாகக் கருதுவதும் தற்பெருமையாகும். பிறகு அது இதே நிலையை உருவாக்கி விடும். பிறகு அந்த நிலையை அடைந்ததும் மற்ற மனிதனை சபிக்கிறார். அவரை ஏளனமாகக் கருதுகிறார். (மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 275-277; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) தற்பெருமையை அகற்றுவதற்கு மனிதன் தனது நல்லொழுக்கங்களை இறைவனிடம் இருந்து கிடைத்ததாகக் கருத வேண்டும்.

இதனை மேலும் விளக்கியவாறு அன்னார் கூறுகிறார்கள்: உண்மையில் அந்த அசுத்தம் மனித உணர்ச்சியாகும். அது தீய ஒழுக்கம் காட்டுதலின் வடிவில் வெளிப்படுகிறது. இறை அருளின்றி இதன் மீது மரணம் வராது. இந்த இறைஞான நெருப்பு வந்து அழிக்காமல் அசுத்தமான பொருள்கள் அழியாது. ஒருவரிடம் மஃரிஃபத்தின் நெருப்பு உருவாகி விட்டால் அவர் நல்லொழுக்க பலவீனங்களிலிருந்து தூய்மையாகி விடுகிறார். பிறகு அப்படிப்பட்டவர் பெரியவராக இருந்து கொண்டும் தன்னை சிறியவராகவே கருதுவார். தனது இருப்பை ஒன்றமற்றதாகப் பெறுகிறார். இறைஞான ஒளிகளிலிருந்து கிடைத்த ஒளியை தனது எந்தத் தகுதியின் சிறப்பாகவோ விளைவாகவோ அவர் கருத மாட்டார். தனது நஃப்ஸின் பக்கம் அதனைச் சுட்டிக் காட்ட மாட்டார். மாறாக அது இறைவனின் கருணை மற்றும் அருள் என்று நிச்சய உறுதி கொள்கிறார். எவ்வாறு ஒரு சுவரில் சூரிய ஒளி பட்டு பிரதிபலிக்கிறதோ அது போன்று ஆகும். ஆனால் அந்த சுவர் பெருமை அடிக்காது. சூரியனின் ஒளி சுவரின் மீது படும்போது அது வெளிச்சம் அடைகிறது. இதில் சுவரின் பெருமை எதுவும் இல்லை. இது எனது ஒரு தகுதியின் விளைவால்தான் ஏற்பட்டது என்று அது பெருமைப்படுவதில்லை.

அவர்கள் கூறுகிறார்கள்: எந்த அளவுக்கு அந்த சுவர் தூய்மையாக இருக்குமோ அந்த அளவுக்கு ஒளியும் துல்லியமாக இருக்கும் என்பதும் வேறு விஷயமாகும். ஆனால், அந்த சுவரின் சொந்தத் தகுதி எதுவும் அந்த ஒளிக்கு காரணமல்ல. மாறாக அந்த பெருமை சூரியனுக்குரியதாகும். அவ்வாறே இந்த ஒளியை எடுத்துக் கொள் என்றும் அந்த சுவர் சூரியனைப் பார்த்துக் கூற இயலாது. அதேபோன்றுதான் நபிமார்கள் அலைஹிமுஸ் ஸலாம் அவர்களுடைய உள்ளங்கள் தூய்மையாக இருக்கின்றன. அல்லாஹ்வின் அருளால் அல்லாஹ்வுடைய இறைஞான அருட்கள் அவர்கள் மீது படுகின்றன. அவர்களை ஒளிமயமாக்கி விடுகிறது. எனவே, அவர்கள் சுயமாக எந்த வாதமும் செய்வதில்லை. மாறாக, அவர்கள் தமது ஒவ்வொரு செயலையும் இறைவனின் பக்கமே சுட்டிக் காட்டுகின்றனர். அதுவே உண்மையும் ஆகும். இந்தக் காரணத்தினால்தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் நீங்கள் உங்கள் செயல்களால் சுவர்க்கத்தில் நுழைவீர்களா? என்று கேட்கப்பட்ட போது ஒருபோதும் இல்லை; இறைவனின் அருளால் தான் நானும் சுவர்க்கத்தில் நுழைவேன் என்று கூறினார்கள்.

நபிமார்கள் அல்ஹிமுஸ் ஸலாம் தமது எந்தவொரு பெருமை அல்லது சக்தியையும் தம்முடையதாகச் சுட்டிக் காட்டுவதில்லை. எவனிடமிருந்து பெற்றார்களோ அவனது பெயரையே கூறுகின்றனர். (மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 274-275; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) நபிமார்கள் மற்றும் இறைவனது குறிப்பான அடியார்களின் நிலை இதுவெனில் ஒரு சாதாரண மனிதன் எவ்வளவு பணிவு காட்ட வேண்டும். எந்த அளவுக்கு அல்லாஹ்வுடைய அருளுக்கு நன்றி செலுத்தியவாறு அதிகமாகக் குனிய வேண்டும்? தற்பெருமை மனிதனிடம் ஆன்மீக மரணத்தைக் கொண்டு வருகிறது. இறைவனை விட்டு மனிதன் தூர விலகி விடுகிறான். அல்லாஹ் மிகவும் ரஹீமும் கரீமும் ஆவான். அவன் எல்லா வகையிலும் மனிதனை பரிபாலிக்கின்றான். அவன் மீது கருணை காட்டுகிறான். இந்த கருணையின் அடிப்படையில் தான் தனது நபிமார்களை அனுப்புகிறான். அதன் மூலம் உலக மக்கள் உலகியல் அசுத்தங்களிலிருந்து ஈடேற்றம் பெறுவதற்காக அவ்வாறு செய்கிறான்.

ஆனால், தற்பெருமை மிகவும் ஆபத்தானது. இது மனிதனிடம் உருவாகி விட்டால் அவருக்கு அது ஆன்மீக மரணமாகும் என்று விளக்கியவாறு ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: நான் நிச்சயமாக அறிகிறேன். இந்த நோய் கொலையை விட பெரியது. தற்பெருமை கொண்டவன் ஷய்த்தானின் சகோதரன் ஆவான். எனவே தற்பெருமைதான் ஷய்த்தானை இழிவுப்படுத்தியது. எனவே நம்பிக்கை கொண்டவரிடம் இந்த தற்பெருமை இருக்கக் கூடாது என்பது நிபந்தனையாகும். பணிவு, மென்மை, அடக்கம் இருக்க வேண்டும். இது இறைவனால் நியமிக்கப்பட்டவரின் சிறப்புத்தன்மை ஆகும். அவர்களிடம் அதிகபட்ச பணிவும் அடக்கமும் காணப்படுகிறது. எல்லாரையும் விட அதிகமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இந்த பணிவு இருந்தது. அவர்களுடைய பணியாளரிடம், உம்முடன் அவர்கள் எவ்வாறு நடந்து கொண்டார்கள்? என்று கேட்கப்பட்டது. உடனே அந்தப் பணியாளர், உண்மை என்னவென்றால் என்னை விட அதிகமாக அவர்தான் எனக்கு தொண்டு செய்கிறார் என்று கூறினார். அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் வபாரிக் வஸல்லிம். (மல்ஃபூஸாத் தொகுதி 8 பக்கம் 101; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

ஜமாஅத்திற்கு அறிவுரை வழங்கியவாறு அன்னார் கூறினார்கள்: பொதுவாக உலகில் தற்பெருமை பரவியுள்ளது. ஆலிம்கள் தனது அறிவின் கர்வத்திலும், பெரிய மனிதத் தன்மையிலும் பீடிக்கப்பட்டுள்ளனர். வறியவர்களின் நிலையோ வேறு விதமாக உள்ளது. அவர்களுக்கு தம்மை தூய்மைப்படுத்தும் பணியே இருப்பதில்லை. எவர் தற்பெருமையில் மூழ்கியுள்ளாரோ அவர் தம்மை சீர்திருத்துவதில் கவனம் செலுத்துவதில்லை.

(தொடர்ச்சி 11 -வது பக்கம்...)

**திருக்குர்ஆனிலிருந்து...**

*மேலும் (அல்லாஹ்வின் அடியார்களாகிய) அவர்கள் செலவு செய்யும்போது வீண் விரயம் செய்யவோ, கருமித்தனம் காட்டவோ செய்யாமல் அவ்விரண்டுக்கும் இடையில் நடுநிலையைக் கைக்கொள்வார்கள். (25:68)*

**லஜ்னா இமாயில்லாஹ்**

ஆதம்பாக்கம்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*திருக்குர்ஆனின் முக்கிய போதனைகளை இரு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று, ஓரிறைக் கொள்கை, இறை அன்பும், இறைவனுக்கு கட்டுப்படுதலும் ஆகும். மற்றொன்று தன் உடன்பிறப்புகளுக்கும் அயலாருக்கும் இரக்கம் காட்டுதல் ஆகும்.*

**மர்ஹூம் A.M. செய்யது அஹ்மது**

மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*(நிராகரிப்பவர்களிடம்) கூறுவீராக: நீங்கள் பிரார்த்தனை செய்யா விட்டால் என் இறைவன் உங்களைப் பொருட்படுத்தவே மாட்டான். நீங்கள் (இறைத் தூதை) மறுத்து விட்டதால் தண்டனை உங்களைப் பற்றிக் கொள்ளும். (25:78)*

**அன்ஸருத்தீன்**

காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, கோயம்புத்தூர்.

# கனடா பாராளுமன்றத்தில் கனடாவின் பிரதமரை ஹுஸூர் அவர்கள் வழங்கிய முக்கிய போதனைகள்

பிரதமர் Justin Trudau : கலீ∴பத்துல் மஸீஹ் அவர்களை இன்று எனது நாட்டில் வரவேற்பது எனக்கு மிகவும் பெருமைதரக்கூடிய விஷயமாகும். ❖ ஹுஸூர் அவர்கள்: இவ்வாறு திறந்த உள்ளத்துடன் நீங்கள் என்னை வரவேற்றதற்காக நான் உங்களுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகின்றேன். நீங்கள் பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டபோது உங்களுக்கு நேரடியாக வாழ்த்துக்களைத் தெரிவிப்பதற்கான சந்தர்ப்பம் எனக்கு கிடைக்கவில்லை. இப்போது நான் உங்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நான் கடிதம் மூலம் உங்களுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்திருந்தேன். ❖ பிரதமர் அவர்கள் - மிகவும் நன்றி. நீங்கள் எல்லா வகையான தீவிரவாதத்திற்கும் கண்டனம் தெரிவிக்கின்றீர்கள். நீங்கள் நாட்டிற்காக நன்றியுணர்வை வெளிப்படுத்தும் மக்களாக இருக்கின்றீர்கள். ❖ ஹுஸூர் அவர்கள்: உலகை அமைதிக்கு அருகில் கொண்டு வரத்தக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் உங்களுக்கு வழங்குவானாக. ❖ பிரதமர் அவர்கள் - 2012 -ல் நான் முதன் முதலாக உங்களைச் சந்தித்த சமயத்தில் நான் உங்களுக்காக துஆ செய்து கொண்டிருந்தேன். அப்போது நீங்கள் ஒருநாள் பிரதமர் ஆவீர்கள் என்று நான் கூறியிருந்தேன். அது உங்கள் நினைவில் இருக்கின்றதா? இல்லையா? என்று எனக்கு தெரியாது. ❖ பிரதமர் அவர்கள்: எனக்கு நன்றாக நினைவில் இருக்கின்றது

### நான்காம் பாகம்

## பிரதமர் Justin Trudeau அவர்களுடன் ஹுஸூர் அவர்களின் சந்திப்பு

இதற்கு பிறகு நிகழ்ச்சிக்கு ஏற்ப ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கனடா பிரதமர் *Justin Trudeau* அவர்களைச் சந்திப்பதாக இருந்தது. ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் பாராளுமன்றத்தின் மூன்றாவது மாடியில் *Cabinet Room* -ற்குச் சென்றார்கள். அங்கு பிரதமர் அவர்கள் ஹுஸூர் அவர்களின் வருகைக்காக காத்திருந்தார்கள்.

பிரதமர் அவர்கள் ஹுஸூர் அவர்களை அன்புடன் வரவேற்றார்கள். கலீஃபத்துல் மஸீஹ் அவர்களை இன்று எனது நாட்டில் வரவேற்பது எனக்கு மிகவும் பெருமை தரக்கூடிய விஷயமாகும். உங்களது ஜமாஅத் "எல்லாரிடத்தும் அன்பு, எவரிடத்திலும் இல்லை வெறுப்பு" என்ற தூதுச் செய்தியை முழு உலகிலும் பரப்பிக் கொண்டிருக்கின்றது என்பதை நான் அறிவேன். இது கனடாவில் தாங்கள் மேற்கொண்டுள்ள மிக நீண்ட சுற்றுப் பயணமாகும் என்று எனக்கு கூறப்பட்டது. டொரோன்டோவிற்குப் பிறகு சிஸ்காடோன் மற்றும் கேல்கரிக்கும் தாங்கள் செல்ல இருக்கின்றீர்கள். கனடாவின் முன்னேற்றத்தில் தாங்கள் அனைவரும் பங்கு பெறுகின்றீர்கள். இவ்வகையில் எங்களுக்காக உங்கள் ஜமாஅத்தின் மீது பெருமையாக இருக்கின்றது. அவர்கள் ஹுஸூர் அவர்களின் தலைமையில் மகிழ்ச்சியாக இருக்கின்றனர். அவர்கள் உங்களுக்கு மிகவும் மதிப்பளிக்கின்றனர் என்று பிரதமர் அவர்கள் கூறினார்கள்.

அதற்கு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: நீங்கள் இந்த அளவு திறந்த உள்ளத்துடன் என்னை வரவேற்றதற்கு நான் உங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதற்கான சந்தர்ப்பம் எனக்கு கிடைக்கவில்லை. இப்போது எனக்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இப்போது நான் உங்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்து கொள்கின்றேன். மேலும் நான் எனது கடிதம் மூலம் உங்களுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்திருந்தேன் என்று ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்.

இதற்கு பிரதமர் அவர்கள் ஹுஸூர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தார்கள். ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: நான் பாராளுமன்றத்தின் அமர்வைப் பார்த்தேன். மிகவும் நன்றாக இருந்தது. நான் மிகவும் ரசித்துப் பார்த்தேன். நீங்கள் மிகவும் அமைதி நிறைந்தவராகக் காணப்பட்டீர்கள். அதற்கு பிரதமர் அவர்கள் ஆரம்பத்தில் எனக்கு சில கேள்விகளுக்குப் பதில் கூற வேண்டியது இருந்தது. நான் அமைதியாக இருக்க வேண்டும். மற்றவர்களுக்கு கண்ணியமளிக்க வேண்டும் என்பதே எனது முயற்சியாக இருந்தது என்று கூறினார்கள்.

ஹுஸூர் அவர்கள் நீங்கள் பாராளுமன்றத்தில் இன்றைய நாட்களில் எல்லா இடங்களிலும் சர்ச்சையில் இருந்து வருகின்ற அத்தகைய விஷயங்களைப் பற்றி நீங்கள் பாராளுமன்றத்தில் விவாதம் செய்துள்ளீர்கள். தீவிரவாதம் தொடர்பாக பேசினீர்கள் என்று கூறினார்கள்.

பிரதமர் அவர்கள் அஹ்மதிய்யா ஜமாஅத் கனடாவில் உயர்வான மனிதநேயத்தை நிலைநாட்டுவதற்காக மிகவும் நல்ல முறையில் பணியாற்றிக் கொண்டிருக்கின்றது. இதில் எங்களுக்கு பெருமையாக இருக்கின்றது. ஜமாஅத் இங்கு சிரியாவிலிருந்து வந்துள்ள அகதிகளையும் பாதுகாத்திருக்கின்றது. அகதிகள் தொடர்பான விவகாரங்களிலும் உங்களது நேர்மறையான பங்களிப்பு இருந்திருக்கின்றது என்று கூறினார்கள்.

பிரதமர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: இன்னொரு உதாரணம் இதுவாகும். அதாவது தாங்கள் எல்லா வகையான தீவிரவாதத்திற்கும் கண்டனம் தெரிவிக்கின்றீர்கள். நீங்கள் நாட்டிற்காக உங்களது நன்றியுணர்வை வெளிப்படுத்தும் மக்களாக இருக்கின்றீர்கள்.

மேலும் பிரதமர் அவர்கள் கடந்த அரசாங்கத்தில் மார்க்கச் சுதந்திரத்திற்கு என்று ஓர் அலுவலகம் இருந்தது. இப்போது நாம் இந்த துறையை மாற்றி விட்டோம். ஏனென்றால், கடந்த அலுவலகத்திற்கு சில அரசியல் நோக்கங்கள் இருந்தன. நாங்கள் இந்த அலுவலகத்தை நிறுவியதன் நோக்கம் மனித நேயமாக மட்டுமே இருக்க வேண்டும்.

அதற்கு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: இது மிகவும் நல்ல விஷயமாகும். இதற்கு உலகில் மிக அதிகமாக தேவை இருக்கின்றது. எல்லா இடங்களிலும் நீதியின் குறைவு இருந்து வருகிறது. நீங்கள் செய்கின்ற ஒவ்வொரு நல்ல பணிகளிலும் இறைவன் தங்களுக்கு உதவி செய்வானாக. உலகை அமைதிக்கு அருகில் கொண்டு வரத்தக்க அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் உங்களுக்கு வழங்குவானாக என்று ஹுஸூர் அவர்கள் துஆ செய்தார்கள்.

அதற்கு பிரதமர் அவர்கள் எங்களது விருப்பமும் இதுவேயாகும் என்று கூறினார்கள். பிரதமர் அவர்களுக்கு ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களுடன் நேருக்கு நேர் நடந்த சந்திப்பு ஏறக்குறைய 15 நிமிடங்கள் வரை நீடித்தது. அதற்கு பிறகு பிரதமர் *Kustin Trudeau* அவர்கள் ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களை பக்கத்தில் இருந்த அறைக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு கீழ்க்காணும் அமைச்சர்கள் இருந்தனர்.

1. மாண்புமிகு நவ்தீஃப் பென்ஸ் *(Minister of Innovation Science and Economic Development)*

2. மாண்புமிகு கிரிஸ்டி டிங்கன் *(Minister of Science)*

3. மாண்புமிகு ஹர்ஜித் சஜன் *(Minister of Defence)*

### திருக்குர்ஆனிலிருந்து...

இவ்வுலக வாழ்க்கையிலும், சாட்சிகள் எழுந்து நிற்கும் நாளிலும் நிச்சயமாக நாம் தூதர்களுக்கும் நம்பிக்கை கொண்டவர்களுக்கும் உதவி செய்வோம்.
(40:52)

**மர்ஹூமா இலைஹி ஜைனப் கனி**
மற்றும் குடும்பத்தினர், திட்டச்சேரி.

### ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஆணவத்திலிருந்து விலகிக் கொள்ளுங்கள் என நான் என் ஜமாஅத்திற்கு அறிவுறுத்துகிறேன். ஏனென்றால் கண்ணியமிக்க நமது இறைவனின் பார்வையில் ஆணவம் வெறுக்கத்தக்கதாகும்.

**மர்ஹூம் M.A.S. முஹையுத்தீன் அலி**
மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்.

### திருக்குர்ஆனிலிருந்து...

எங்கள் இறைவன் அல்லாஹ் எனக் கூறி, இக்கொள்கையில் நிலைத்திருப்பவர்களிடம், நீங்கள் அஞ்சவும் வேண்டாம்; கவலையடையவும் வேண்டாம். உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட சொர்க்கத்தைப் பற்றிய நற்செய்திகளை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று (கூறியவாறு) வானவர்கள் இறங்குவர். (41:31)

**மர்ஹூம் முஹம்மது ஸாலிஹ்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

4. மாண்புமிகு மய்லானி ஜோலி (*Minister of Heritage*)

5. மாண்புமிகு ஜான் மக்கோலம் (*Minister of Immigration, Citizenship and Refugees*)

6. மாண்புமிகு கரலா குவால்ட்ராஃப் (*Minister of Sports and Prescence Widows Abilities*)

இவர்களைத் தவிர பாராளுமன்ற உறுப்பினரான Judy Sugo அவர்களும் அங்கு இருந்தார்கள். இந்த அறையில் பிரதமர் மற்றும் ஏனைய ஆறு அமைச்சர்களுடனான ஹுஸூர் அவர்களின் சந்திப்பு ஏறக்குறைய அரை மணி நேரம் வரை நீடித்தது.

பிரதமர் அவர்கள் ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களை மீண்டும் வரவேற்றார்கள்.மேலும் பிரதமர் அவர்கள் ஜமாஅத் செய்த தொண்டுகளைப் பற்றி குறிப்பிட்டார்கள். மேலும் அஹ்மதிய்யா ஜமாஅத் உலகில் அமைதியை நிலைநாட்டுவதற்கு முயற்சி செய்கின்ற ஒரு ஜமாஅத்தாகும் என்றும் கூறினார்கள்.

அதற்கு ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் உங்களுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். நீங்கள் அஹ்மதி அகதிகளை ஏற்றுக் கொண்டிருக்கின்றீர்கள். சிரியாவில் இருந்து வந்துள்ள குடும்பங்கள் மற்றும் லாஹூரிலுள்ள ஷஹீதுகளின் குடும்பங்களை ஏற்றுக் கொண்டுள்ளீர்கள். இதற்காக நான் உங்களுக்கு குறிப்பாக நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன் என்று கூறினார்கள்.

ஹுஸூர் அவர்கள் பிரதமர் அவர்களைப் பார்த்து இவ்வாறு கூறினார்கள்: 2012 -ல் முதன் முறையாக நான் உங்களைச் சந்தித்தேன். அப்போது நான் உங்களுக்காக துஆ செய்தேன். மேலும் ஒரு நான் தாங்கள் பிரதமராக ஆவீர்கள் என்று கூறியிருந்தேன். இது உங்களது நினைவில் இருக்கின்றதா? இல்லையா? என்று எனக்கு தெரியவில்லை.

அதற்கு பிரதமர் அவர்கள் தாங்கள் கூறியது எனக்கு நன்றாக நினைவில் இருக்கின்றது என்று கூறினார்கள். தொடர்ந்து ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: எனக்கு அந்த சமயத்தில் இதுவும் தெரியும். அதாவது நீங்கள் மனித உரிமைகளை மதிக்கின்ற மக்களைச் சார்ந்தவராவீர்கள். அதற்கு பிரதமர் அவர்கள் ஹுஸூர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தார்கள். ஒவ்வொரு கட்சியும் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு ஆதரவாக இருக்கின்றது என்று என்னால் கூற முடியும். அஹ்மதிகளின் கொள்கையையும் அஹ்மதிகளின் கொள்கை -யையும் வழிமுறைகளையும் நாங்கள் பாராட்டி பேசுகின்றோம் என்றும் பிரதமர் அவர்கள் கூறினார்கள்.

ஏனைய எல்லா அமைச்சர்களும் ஒருவர் பின் ஒருவராக ஹுஸூர் அவர்களிடம் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டனர். ஹுஸூர் அவர்களுடன் மாண்புமிகு மய்லானி ஜோலி (*Minister of Heritage*) அவர்கள் அமர்ந்திருந்தார்கள். அவர்கள் ஹுஸூர் அவர் -களிடம் அடுத்த வருடம் கனடாவின் 150 -வது வருட கொண்டாட்டங்கள் இருக்கும். இதை நாங்கள் கொண்டாடுகின்றோம். அஹ்மதிய்யா ஜமாஅத் இதில் முழுமையாக பங்கு பெறும் என்று நான் நம்புகின்றேன் என்று கூறினார்கள். இதற்கு ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கனடா ஜமாஅத்தும் கூட தமது ஐம்பதாவது வருடத்தைக் கொண்டாடுகின்றது. இதற்கான நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த வருடம் இவர்களின் 40 -வது ஆண்டு மாநாடு நடைபெற்றது. யூ.கே -வில் இந்த வருடம் எங்களது 50 -வது ஆண்டு மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் 38 ஆயிரத்-திற்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டனர். கனடா ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 25 ஆயிரமாகும்.

பிரதமர் அவர்கள் யூ.கே மற்றும் கனடாவிலுள்ள அஹ்மதிய்யா ஜமாஅத்து -களுக்கு இடையில் ஏதாவது வித்தியாசம் இருக்கின்றதா? என்று ஹுஸூர் அவர்களிடம் கேட்டார்.

இதற்கு ஹுஸூர் அவர்கள் “இரண்டு நாடுகளிலும் அரசாங்க அளவில் நல்ல தொடர்புகள் இருக்கின்றது முதலாவதாக யூ.கே -வில் அஹ்மதிய்யா பாராளுமன்ற குழு உருவானது. இப்போது கனடாவிலும் இந்த குழு அமைக்கப்பட்டுள்ளது. கனடாவில் யூ.கே-ஐ விட அஹ்மதிகள் குறைவாகத்தான் இருப்பர். ஆனால், இங்கு அரசாங்கத்துடன் அவர்களுக்கு இருந்து வரும் தொடர்புகளும் இங்குள்ள அரசாங்கத்தின் *Resonse* -ம் யூ.கே-வை விட அதிகமாக இருக்கின்றன.

தொடர்ந்து ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: யூ.கே -வில் சில முஸ்லிம் அமைப்புகள் உள்ளன. நம்முடன் அவர்களுக்கு நெருக்கமான தொடர்புகள் இருப்பதை அவை விருப்புவதில்லை. ஆனால், மனிதர்களின் தகுதிகளை நிலைபெறச் செய்வதற்காக நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து பணியாற்ற வேண்டும். நமக்கிடையில் ஒற்றுமை இருந்தால் இதில் சிறந்த நிலை உருவாகும் என்று நாங்கள் விரும்புகின்றோம். ஏனைய மற்ற மதங்களுடன் இங்கும் யூ.கே -விலும் எங்களுக்கு நல்ல தொடர்புகள் இருந்து வருகின்றன.

பிரதமர் அவர்கள் ஹுஸூர் அவர்களிடம் நீங்கள் எத்தகைய ஓர் அமைப்பாக இருக்கின்றீர்கள் என்றால் அதற்கு எதிர்ப்பு இருக்கின்றது. எனவே, நான் உங்களிடம் கேட்க விரும்புவது என்றால் நீங்கள் ஏனைய சிறுபான்மையினர் தொடர்பான விவகாரங் -களை எவ்வாறு பார்க்கின்றீர்கள்? உதாரணமாக, *Genter Issue* அதாவது ஆண்கள், பெண்கள் கலந்திருத்தல் தொடர்பான விவகாரங்கள், பொருளாதார விவகாரங்கள், மற்றும் மார்க்க சுதந்திரம் தொடர்பான விவகாரங்களில் நமது அணுகுமுறை எவ்வாறு இருக்க வேண்டும் என்பது தொடர்பான உங்கள் வழிகாட்டலை வழங்குங்கள் என்று கூறினார்.

அதற்கு ஹுஸூர் அவர்கள் தாங்கள் ஒரே கேள்வியில் பல விவகாரங்கள் பற்றி கூறியுள்ளீர்கள். நாம் ஒவ்வொன்றையும் தனித்தனியாக பார்க்க வேண்டும். நான் ஒரு மார்க்கத்துடன் தொடர்புடைய மனிதன் என்ற நிலையிலும் இஸ்லாத்தை பின்பற்றுபவன் என்ற நிலையிலும் இஸ்லாமிய போதனை -களுக்கேற்ப இதைத்தான் நான் கூறுவேன்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

இவ்வுலகில் இறைவனைப் பார்க்கும் பேறிழந்தவர்கள் மறுமையிலும் இருளிலே இருப்பர். இறைவன் கூறுகிறான். இவ்வுலகில் குருடராக இருப்போர் மறுமையிலும் குருடராகவே இருப்பர். (17:73)

**K. சலீம் அஹ்மது**
பிரதிநிதி, பத்ர் வார தமிழ் பதிப்பு, திருச்சி.

## திருக்குர்ஆனிலிருந்து...

உங்களுக்கு ஏதேனும் தீங்கு ஏற்பட்டால் அது உங்கள் கைகள் சம்பாதித்தவற்றி(ன் விளைவி)னாலே ஆகும். அவன் (உங்கள் பாவங்களுள்) அதிகமானவற்றை மன்னிக்கிறான். (42:31)

**S. முஹம்மது இஸ்மாயீல்**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்

S. MABU
87541 71700
81240 22479
90955 89992
78719 66352
STAR ORGANIC
TERRACE GARDEN DIVISION
- Panchagavya
- Pest Repeller
- See Veed Extract
- All kinds of garden tools
Email: Starorganicmabu@gmail.com
THARPOLIN + POULTRY
EQUIPMENTS SALES
TIRUNELVELI DIST.

93600 05888
78716 00664
IBR
Construction Materials

எங்களிடம் கட்டடத்திற்கு தேவையான சிமெண்ட், செங்கல், மணல், ஜல்லி, கிராவல், மெட்டல், ஹலோபிலாக் மற்றும் அனைத்து பொருட்களும் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.
சுப்புலட்சுமி நகர், நிர்மலா மாதா ஸ்கூல் ரோடு, குனியமுத்தூர், கோவை–5.

## திருக்குர்ஆனிலிருந்து...

மக்களே! நீங்கள் உங்களையும் உங்களுக்கு முன்னிருந்தோரையும் படைத்த உங்களது இறைவனை மட்டும் வணங்குங்கள். அதனால், நீங்கள் எல்லா விதமான ஆபத்துகளிலிருந்தும் தவிர்ந்து கொள்ளலாம். (2:22)

**A. பஷீர் அஹ்மது**
பிரதிநிதி, பத்ர் வார தமிழ் பதிப்பு, மேலப்பாளையம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

மனிதன் நல்லதைக் கேட்பதில் ஒருபோதும் சோர்வடைவதில்லை. ஆனால், அவனுக்கு ஏதேனும் துன்பம் ஏற்பட்டால், அவன் நம்பிக்கை இழந்து சோர்வடைந்து விடுகின்றான். (41:50)

**S.H. வஸீம் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்

அதாவது ஒவ்வொரு நபருக்கும் மார்க்க சுதந்திரம் கிடைக்க வேண்டும். உதாரணமாக, ஒவ்வொரு பெண்ணுக்கும் அவர் முழுமையான முறையில் கல்வி கற்பதற்கான உரிமை அவருக்கு இருக்கின்றது. ஆனால், சில மத விவகாரங்களும் உள்ளன. அவற்றில் அரசாங்கத்தின் தலையீடு இருக்க கூடாது. உதாரணமாக, (பெண்கள்) தங்களை திரையிடுவது உள்ளது. இவ்வாறே *Segregration* அதாவது ஆண்களும் பெண்களும் தனித்தனியாக அமர்வது இருக்கின்றது. ஆண்களும் பெண்களும் தத்தமது பல்வேறு நிகழ்ச்சிகளில் தனித்தனியாக ஹாலில் அமர்கின்றனர். இப்படிப்பட்ட விவகாரங்களில் பெண் எதை விரும்புகின்றார் என்பதை நீங்கள் பார்க்க வேண்டும். அவள் தனியாக அமர விரும்புகின்றாள் என்றால், மேலும் தனியாக அமர்வதில் அவள் அதிகமான சுகத்தையும் வசதியையும் உணர்கின்றாள் என்றால் அதில் சுதந்திரத்தை உணர்கின்றாள் என்றால் பிறகு அரசாங்கம் அதில் தடையை ஏற்படுத்தக் கூடாது.

ஹுஸூர் அவர்கள் மேலும் இவ்வாறு கூறினார்கள்: நீங்கள் பொருளாதார பிரச்சனை பற்றி கூறினீர்கள். இது எனது பார்வையில் ஒரு பெரிய பிரச்சனையாகும். பொருளாதார கஷ்டங்கள் காரணமாக சில இளைஞர்கள் அவநம்பிக்கைக்கு இரையாகி தீவிரவாத பிரிவுகளின் பக்கம் சாய்ந்து விட்டனர். ஈராக் போர் நடந்த பிறகு இந்த பிரச்சனை மேலும் அதிகமானது. பிறகு 2011 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நடந்த சம்பவத்திற்கு பிறகு மேலும் இது அதிகமானது. சில அமைப்புகளும் பிரிவுகளும் உருவாகின.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: 2008 -ல் பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட பிறகு தீவிரவாதம் மேலும் அதிகமானது. தாயிஷ் தீவிரவாதிகளின் அமைப்பு ஏற்பட்டது. அதற்கு பிறகு அரபி *Sing* -ம் ஏற்பட்டது. தீவிரவாத அமைப்புகள் இளைஞர்களின் அமைதியற்ற நிலை மற்றும் அவநம்பிக்கையிலிருந்து பயனடைந்தனர். இளைஞர்களிடத்தில் வேலைகள் இல்லாமல் இருந்தது. பொருளாதார நெருக்கடியின் காரணமாக பல மக்களும் தங்களது வேலைகளை விட்டு விலகி விட்டனர். இந்த விஷயத்திலிருந்து பலனடைந்தவாறு தீவிரவாத அமைப்புகள் இந்த இளைஞர்களுக்கு பணம் தருவதாக பேராசை காட்டினர். இதனால் பல மக்களும் அவர்களிடம் சென்று தீவிரவாத அமைப்பு -களில் இணைந்தனர்.

ஹுஸூர் அவர்கள் தொடர்ந்து இவ்வாறு கூறினார்கள்: நான் கனடா தொடர்பாக இந்த விஷயத்தைப் படித்திருக்கின்றேன். இங்கிருந்து எந்த மக்கள் ஈராக், சிரியா ஆகிய நாடுகளுக்கு அல்லது தீவிரவாதத்திற்காக சென்றனரோ அவர்களில் கூட இருபது சதவிகிதம் பேர் பெண்கள் ஆவர். இது மிகவும் அபாயகரமான விஷயமாகும். பெண்கள் தீவிரவாதிகளாக மாறுகின்றனர் என்றால் பிறகு அவர்கள் தங்கள் குழந்தைகளுக்கும் கூட இதே பயிற்சியைத்தான் வழங்குவர்.

ஐரோப்பிய நாடுகள் முஸ்லிம் உலகிற்கு அருகில் இருக்கின்றன. எனவே, ஐரோப்பாவில் தீவிரவாதம் வருதற்கான ஒரு பெரிய அபாயம் இருக்கின்றது. இன்னும் சொல்வதென்றால் இதுபோன்ற சில சம்பவங்களும் நடந்துள்ளது. ஐரோப்பாவை விட கனடாவில் இருக்கின்ற நீங்கள் முஸ்லிம் நாடுகளை விட்டு தொலைவில் இல்லை. ஆனால், நாங்கள் பாதுகாப்பாக இருக்கின்றோம் என்று நீங்கள் சிந்திக்கக் கூடாது. இங்கும் கூட இந்த தீவிரவாதப் பிரிவுகள் அபாயகரமானதாக ஆக முடியும்.

இதனைக் கேட்ட பிரதமர் அவர்கள் ஹுஸூர் தாங்கள் முற்றிலும் உண்மையைத் தான் கூறுகின்றீர்கள். தீவிரவாதத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்காக நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒன்றாக பணியாற்ற வேண்டும்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: முஸ்லிம்கள் தங்களது உண்மையான போதனைக்கு ஏற்ப செயல்பட்டால் அவர்கள் ஒருபோதும் தீவிரவாதிகளாக ஆக முடியாது. ஏனென்றால், இஸ்லாத்தின் தோற்றுனரான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நாட்டுபற்று ஈமானின் ஒரு பகுதியாகும் என்று கூறியுள்ளார்கள். உங்களுக்கு உங்களது நாட்டின் மீது அன்பு இருந்தால் பிறகு உங்களது ஒவ்வொரு முயற்சியும் நாட்டின் முன்னேற்றத் -திற்காகவே இருக்கும்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இதன் காரணமாகவே அஹ்மதிகளாகிய நாங்கள் எங்களது ஜமாஅத்தைச் சார்ந்தவர்கள் தீவிர-வாதிகளாக இருப்பதில்லை. ஏனென்றால், நாங்கள் இஸ்லாத்தின் உண்மையான போதனைகளுக்கு ஏற்ப செயல்படுகின்றோம்.

பிரதமர் அவர்கள் இறுதியில் ஹுஸூர் அவர்களுக்கு இன்னொரு முறை நன்றி தெரிவித்தார்கள். கனடா பிரதமர் மற்றும் அவர்களது அமைச்சரவையைச் சார்ந்த ஆறு அமைச்சர்களுடன் ஹுஸூர் அவர்களின் இந்த சந்திப்பு 4 மணி 35 நிமிடங்கள் வரை நீடித்தது. அதற்கு பிறகு நிகழ்ச்சிக்கு ஏற்ப ஹுஸூர் அவர்கள் *Parliament Hill* -லிருந்து ஹோட்டல் *Fairmont Chattau Laurier* ற்கு வருகை தந்தார்கள். இந்த ஹோட்டல் பாராளுமன்றத்திலிருந்து ஐந்து நிமிடம் பயணம் செய்யும் அளவில் அருகில் இருந்தது. நிகழ்ச்சிக்கு ஏற்ப இங்கு சிறிது நேரத்திற்காக தற்காலிகமாக தங்குவது இருந்தது. அதற்குப் பிறகு மீண்டும் *Parliament Hill*-ற்கு திரும்பிச் செல்ல வேண்டியது இருந்தது. அங்கு *Sir John A Macdomald Hall* -ல் ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களைக் கண்ணியப்படுத்தும் வகையில் ஒரு நிகழ்ச்சிக்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நிகழ்ச்சிக்கு ஏற்ப 6.30 மணிக்கு ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் *Parliament Hill* -ற்குச் சென்றார்கள். 6.35 மணிக்கு ஹுஸூர் அவர்கள் *Sir John A Macdonokd Hall* -ற்கு வருகை தந்தார்கள். ஹுஸூர் அவர்கள் வருவதற்கு முன்னதாக இன்றைய இந்த முக்கிய நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக வந்திருந்த அனைத்து விருந்தினர்களும் தத்தமது இருக்கையில் அமர்ந்திருந்தனர்.

இன்றைய இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்கின்ற விருந்தினர்களில் கனடா அரசாங்கத்தின் ஆறு அமைச்சர்களும், 57 தேசிய பாராளுமன்ற உறுப்பினர்களும், 11 நாடுகளின் தூதுவர்களும் ஜெர்மனி, ஜமைக்கா, இந்தியா, பெரு, இலங்கை, இஸ்ரேல், ஹாலந்து, கஸகிஸ்தான், அங்கோலா, குரோஸியா, வெனிஸ்வேலா ஆகிய நாடுகளின் தூதுவர்களும், யு.எஸ்.ஏ தூதரகத்தின் முதன்மை செயலரும், லிபியா தூதரகத்தின் பிரதிநிதியும் கலந்து கொண்டனர்.

ஒன்டாரியோ மாநிலத்தின் ஓர் அமைச்சர் அவர்களும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். இதை தவிர 30 -ற்கும் மேற்பட்ட முக்கிய பிரமுகர்களும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். அவர்களில் *Chief of Staff for Ministers, Director Avengelicol Fellowship, Cheif Communication Officer of Canadian Red Cross, Assistant Comissioner R.M.P., Professors and Deens and Vice President of University of Ottawa and Carlatin University, Director National Canadian Council for Muslin, President of Progressive Muslim Canada,* கனடாவின் மனித உரிமை கழகத்தின் பிரதிநிதி, *Relegious Freedom and Englosen* -ன் பிரதிநிதி, *Indo Canadian Business Chamber* -ன் பிரதிநிதி *U.S. Government U.S.C.I.R.F* அலுவலகத்தின் பிரதிநிதிகள், *Think Tanic Members* ஆகியோர் அடங்குவர்.

இந்த அனைவரும் தத்தமது இருக்கைகளில் அமர்ந்திருந்தனர். ஹுஸூர் அவர்கள் *John A Maedonold Hall* -ற்கு வருகை தந்த பிறகு மேடையில் வந்து அமர்ந்தார்கள்.

(தொடரும்...)

## திருக்குர்ஆனிலிருந்து...

*நிச்சயமாக நம்பிக்கையாளர்கள்*
*சகோதரர்கள் ஆவர். எனவே*
*சகோதரர்களுக்கிடையில் நீங்கள்*
*சமாதானத்தை ஏற்படுத்துங்கள்.*
*உங்களுக்குக் கருணை காட்டப்படுவதற்கு,*
*நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்.*
*(49:11)*

**பீ.ஜே. சுலைமான்**
மற்றும் குடும்பத்தினர், கோயம்புத்தூர்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

*ஓரிறைக் கொள்கை ஓர் ஒளியாகும். அது அகத்திலும் புறத்திலும் உள்ள பொய்க் கடவுள்களை மறுப்பதன் பின் உள்ளத்தில் உருவாகிறது. பின்னர் அது மனித உடலின் ஒவ்வொரு அணுவிலும் பரவி விடுகிறது. எனவே இதனை அல்லாஹ் மற்றும் அவனின் தூதர் மூலமேயன்றி மனித ஆற்றல்களால் எவ்வாறு பெற முடியும்?*

**S.A. அப்துல் ஹக்**
சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், ஆதம்பாக்கம்.

**ALIF AUTO CARE**
Pudupet, Chennai.
Ph: 98847 74525

**CITY HARDWARE STORE'S**
Chrompet, Chennai - 600 044.
Ph : 044-22655219

**Classic Mobile's & Watch, Hiba watch & Mobiles**
Poyampalayam, P.N. Road,
Tiruppur.
Ph: 95666 47717

## ஈது மிலன் – பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சி

உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் மேலப்பாளையம் கிளையின் சார்பாக ஈது மிலன் நிகழ்ச்சி 02.07.2017 ஞாயிறு மாலை 5.00 மணிக்கு திருநெல்வேலி புதிய பேருந்து நிலையம் எதிரே உள்ள ஹோட்டல் லாரா பாரடைஸ் A/c ஹாலில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தின் அமீர் ஜனாப் A.P.Y. அப்துல் காதிர் சாஹிப் அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

துவக்கத்தில் மவ்லவி M. ரஃபீக் அஹ்மது சாஹிப் திலாவத் ஓதினார்கள். வெளிவிவகாரத்துறைச் செயலர் ஜனாப் M. சபாஹுல் இஸ்லாம் சாஹிப் வரவேற்புரையாற்றினார்கள். மேலப்பாளையம் ஜமாஅத்தின் அமீர் ஜனாப் A. நாஸிர் அஹ்மது சாஹிப் அறிமுகவுரை நிகழ்த்தினார்கள். அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது அவர்கள் உலகில் அமைதியை நிலைநாட்ட எடுத்து வரும் முயற்சிகள் குறித்த குறும்படம் காண்பிக்கப்பட்டது. சமயங்கள் கூறும் மத நல்லிணக்கம் மற்றும் மனித நேயம் என்ற தலைப்பில் Rev.Fr. அந்தோணி குரூஸ் அவர்கள், திரு. சிவ கிருபாகரன் அவர்கள், மவ்லவி M.B. தாஹிர் அஹ்மது சாஹிப் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். திரு. சிவராஜன் அவர்கள் (Chief Managar State Bank of India, Palayamkottai) திரு. வளன் அரசு அவர்கள் (சேர்மன் உலக திருக்குறள் தகவல் மையம்), திரு. ஜாண் டி பிரிட்டோ அவர்கள் (பதிவாளர், மனோண்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்), திரு. ராம சுப்பு அவர்கள் (முன்னாள் எம்.பி) ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். இறுதியாக மாவட்ட அமீர் ஜனாப். A.P.Y. அப்துல் காதிர் சாஹிப் அவர்கள் தலைமையுரையாற்றி துஆ செய்தார்கள். இந்நிகழ்ச்சிக்கு ஜமாஅத் உறுப்பினர்கள், மாற்று மத சகோதரர்கள், மருத்துவர்கள், பொறியாளர்கள், ஆசிரியர்கள், ஊடக மற்றும் பத்திரிகைத் துறையினர் என பல்வேறு தரப்பினர் கலந்து கொண்ட பயன் பெற்றனர். கலந்து கொண்ட அனைவருக்கும் விருந்திற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பான செய்திகள் தமிழ் நாளிதளான தினமலர், தினகரன் பத்திரிகையிலும், உள்ளூர் தொலைக்காட்சியான ஏ.எம்.என். டி.வி, மயூரி டி.வி. -யிலும் செய்திகள் வந்தன. மேலும் www.youtube.com/live -விலும் இந்த நிகழ்ச்சி நேரலையாக ஒளிபரப்பப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஜமாஅத்தின் குத்தாம் பலர் கலந்து கொண்டு தன்னார்வத் தொண்டுகளாற்றினர்.

(தகவல்: A. பஷீர் அஹ்மது - பத்திரிகைச் செய்தித் தொடர்பாளர், மேலப்பாளையம்)

(குத்பா தொடர்ச்சி...)

அவர்கள் கூறுகிறார்கள்: அவர்களது இலக்கு முழுவதும் உடலோடு நின்று விட்டது. எனவே அவர்களது முயற்சியும் கவனமும் வேறு வகையில் உள்ளன. உதாரணமாக, திக்ர் போன்றவை. அவர்களுக்கு நுபுவத்தின் ஊற்றைப் பற்றித் தெரியவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அத்தகைய திக்ர் அல்லது முயற்சி தென்படவில்லை.

அவர்கள் கூறுகிறார்கள்: உள்ளத்தை தூய்மைப்படுத்துவதில் இவர்களிடம் கவனம் இல்லை என்பதைப் பார்க்கின்றேன். வெறும் உடல் மட்டும்தான் எஞ்சியுள்ளது. ஆன்மீகத்தின் பெயரும் அடையாளமும் கூட அவர்களிடம் இல்லை. இந்த முயற்சி உள்ளத்தைத் தூய்மைப்படுத்தாது அல்லது உண்மையான இறைஞான ஒளியை வழங்கவும் செய்யாது. ஆகவே, இந்தக் காலம் முற்றிலும் வெறுமையாக உள்ளது. செய்ய வேண்டிய நபியின் வழிமுறை முற்றிலும் கைவிடப்பட்டு விட்டது. அதனை மறுத்து விட்டனர். இப்போது அந்த நுபுவ்வத்தின் காலக்கட்டம் மீண்டும் வர வேண்டும் என்றும், தக்வாவும் தூய்மையும் மீண்டும் நிலைநாட்டப்பட வேண்டும் என்றும் இறைவன் விரும்பினான். எல்லா நன்மைகளையும் இந்த ஜமாஅத்தின் மூலம் செயல்படுத்த நாடினான். ஈமானை உறுதிப்படுத்த விரும்பினால் இந்த ஜமாஅத்தின் மூலமே நாடினான்.

அன்னார் கூறுகிறார்கள்: உண்மையான சீர்திருத்தத்தின் பக்கம் கவனம் செலுத்துங்கள். அத்தகைய ஜமாஅத்தையே அல்லாஹ் விரும்பினான். பிறகு அந்த ஜமாஅத்தைச் சார்ந்தவர்கள் உண்மையான சீர்திருத்தம் பெற வேண்டும் என்று விரும்பினான். உண்மையான சீர்த்திருத்தின் பக்கம் கவனம் செலுத்துங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காட்டிய சீர்திருத்தத்தின் வழியில் அதனை செய்யுங்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 278; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) அல்லாஹ் நம்மை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உடைய சுன்னத் மற்றும் அன்னார் கூறிய வழியில் சென்றவாறு எல்லா தீமையிலிருந்து விலகவும், எல்லா உயர் நல்லொழுக்கங்களையும் பெறவும் வாய்ப்பளிப்பானாக. நமது உண்மையின் தரம் இறை நெருக்கத்தைப் பெற்றுத் தரும் அளவுக்கு இருக்கட்டுமாக. நமது பணிவின் தரமும் இறைவனுக்கு பிடிக்கட்டுமாக. நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஜமாஅத்தின் எத்தகைய மக்களாக வேண்டும் எனில் அன்னார் எப்படி நம்மைப் பார்க்க விரும்பினார்களோ அப்படி இருப்போமாக.

★ ★ ★ ★ ★

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

உறுதியாக அறிந்து கொள்க. கண்ணின்றி காண முடியாதது போன்று, காதின்றி கேட்க முடியாதது போன்று நாவின்றி பேச முடியாதது போன்று திருக்குர்ஆனின் உதவியின்றி அந்த அன்பிற்குரிய இறைவனின் முகத்தைப் பார்க்க இயலாது.

**ஜலாலுத்தீன்**
சத்ர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், தூத்துக்குடி.

A.M. Zakir Hussain
✆ +91 98429 41237

**METAPLAST**
DEALERS IN ALL KIND OF PLASTIC RAW MATERIAL & SCRAP

# 70-A, M.S. Nagar, Kurichi Pirivu,
Podanur Main Road, Coimbatore - 641023.

Ph : +91 422-2411124 Mob : 9364218000
Email : zakir@yahoo.com

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

முஸ்லிம், கிறித்தவர், இந்து, ஆரியர் ஆகிய எல்லாருக்கும் நான் ஒன்றைத் தெளிவுபடுத்துகிறேன். உலகில் எவரும் எனக்குப் பகைவர் இல்லை. பாசமிக்க தாய் ஒருத்தி தன் குழந்தைகளை நேசிப்பதை விட மிகுதியாக மனிதயினத்தை நான் நேசிக்கிறேன்....

**மர்ஹூமா நதீரா பேகம்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

0422-2399980, 4351980
emial: metrozonesince1980@gmail.com
web: www.metrozoneonline.com

**Metro Zone**
WATCH, MOBILES & ELECTRONICS
SALES & SERVICE



276, N.H. Road, Coimbatore - 641 001.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

வானத்தில் இறைவன் உங்கள் மீது திருப்தி கொள்ள வேண்டுமென்று எண்ணினால் நீங்கள் ஒருவருக்கொருவர் ஒரே வயிற்றில் பிறந்த இரு சகோதரர்களைப் போல் ஆகிவிடுங்கள்.

**மர்ஹூம் T. அப்துர் ரஹ்மான்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

M. Abdul Raoof
✆ +91 9362 2272 29

SUCCESS INDIA
PROMOTERS

Coimbatore, Tamil Nadu
Mob : +91 9363 2272 27
Email: successraoof@gmail.com

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly **BADAR** Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 2 Thursday 20 July 2017 Issue No. 29

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com
**ANNUAL SUBSCRIPTION** : Rs.300/-

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைக்கு ஒரு மகத்தான ஆதாரம்

وَلَوْ تَقَوَّلَ عَلَيْنَا بَعْضَ الْأَقَاوِيلِ ۝ لَأَخَذْنَا مِنْهُ بِالْيَمِينِ ۝ ثُمَّ لَقَطَعْنَا مِنْهُ الْوَتِينَ ۝

அவர் எந்த சொல்லையேனும் பொய்யான வெளிப்பாடாக எம்மீது சுமத்தியிருந்தால் நிச்சயமாக நாம் அவரை எம் வலக்கையால் பிடித்திருப்போம். பிறகு நிச்சயமாக நாம் அவரது உயிர் நாடியைத் துண்டித்திருப்போம். (69:45-47)

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுனரும் வாக்களிக்கப்பட்ட மஸீஹுªம் மஹ்தியுமாகிய ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இஸ்லாத்தின் உண்மை மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் தனக்கு இருக்கின்ற ஆன்மீகத் தொடர்பு குறித்து பலமுறை இறைவன் மீது சத்தியம் செய்தவாறு நான் இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்டுள்ளேன் என்று கூறியுள்ளார்கள். அவர்களது அத்தகைய பெரும்பாலான மேற்கோள்களைத் தொகுத்து, “இறைவன் மீது ஆணையாக” என்ற பெயரில் ஒரு நூல் வெளியிடப்பட்டிருக்கின்றது. இந்த நூலைப் பெற விருப்பமுள்ள சகோதரர்கள் போஸ்ட் கார்டு அல்லது மின்னணு அஞ்சல் (Email) மூலம் தெரியப்படுத்தி அந்த நூலை இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

**E-mail: abdulqadir.wahid@gmail.com**

**MOB : 9626445578**

Postal-Address: ABDUL QADIR AHMADIYYA MUSLIM MISSION
No. 3, United India Colony, Frist Main Road, Kodambakkam, Chennai - 600 024, TAMIL NADU.

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS
DOORS & STEELS EXPERT



All Types of wooden Doors, Skin Doors Steal Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

ரஹ்மானியா மேல்நிலைப் பள்ளி
ரஹ்மானியா தொடக்கப் பள்ளி
ரஹ்மானியா மெட்ரிகுலேஷன் பள்ளி
மேலப்பாளையம், திருநெல்வேலி.
S.S. அஸன் அபூபக்கர் ✆ 94869 37769

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

‘தஜ்ஜால்’ (பொய்யன்) ‘முல்ஹித்’ (மார்க்கமிழந்தவன்) என்று பெயர் சூட்டுவீர்களேயானால் பின்னர் நாம் قُلْ يٰٓاَيُّهَا الْكٰفِرُوْنَ لَآ اَعْبُدُ مَا تَعْبُدُوْنَ அதாவது, நீர் கூறுவீராக: நிராகரிப்பாளர்களே ! நீங்கள் வழிபடும் விதத்தில் நான் வழிபட மாட்டேன். **(109:2,3)** என்னும் இவ்விரண்டு வசனங்களைக் கொண்டு இவ்வுரையை நாம் முடித்துக் கொள்கிறோம்.

உங்களிடையே வேற்றுமையும் விரோதமும் இருந்து வரும் இக்காலத்தில் உங்களது போலி மஸீஹுªம் போலி மஹ்தியும் யாரையெல்லாம் வாளால் தாக்குவார்கள் ? சுன்னிகள் கருத்தின்படி ஷியாக்கள் வாளால் தாக்கப்படு -வதற்குத் தகுதியுள்ளவர்களில்லையா ? ஷியாக்களின் கருத்தின்படி சுன்னிகள் அனைவரும் வாளால் அழிக்கப்படுவதற்குத் தகுதியுள்ளவர்கள் இல்லையா ? ஆகவே உங்களின் நம்பிக்கையின்படி உங்களிலுள்ள பிரிவினர்களே தண்டனைக்குத் தகுதியுள்ளவர்களாக இருக்கையில் நீங்கள் யார் யாரிடமெல்லாம் ஜிஹாத் செய்வீர்கள் ? ஆனால் இறைவனுக்கு வாள் தேவை இல்லை என்பதனை நினைவில் கொள்ளுங்கள். அவன் தனது மார்க்கத்தை வானத்தின் அடையாளங்களைக் கொண்டு பூமியின் மீது பரவச் செய்வான். அதனை எவராலும் தடை செய்யவே முடியாது.

இனி ஹஸ்ரத் ஈசா (அலை) ஒருபோதும் வானத்திலிருந்து இறங்கி வரமாட்டார் என்பதை நீங்கள் ஞாபகம் வையுங்கள். ஏனெனில் فَلَمَّا تَوَفَّيْتَنِيْ பொருள்: எப்போது நீ என்னை மரணிக்கச் செய்தாயோ **(5:118)** என்ற திரு வசனத்தின் மூலமாக கியாமத் என்னும் இறுதி நாளில் அவர் கொடுக்க இருக்கும் ஒப்புதல் வாக்குமூலத்தில் மீண்டும் இவ்வுலகத்திற்கு அவர் வரமாட்டார் என்பதை அவர் ஒப்புக் கொண்டிருப்பது தெளிவாகக் காணப்படுகிறது. மேலும் கிறித்தவர்கள் கெட்டழிந்து போனதைக் குறித்து நான் ஒன்றும் அறியேன் என்பதே இறுதி நாளில் தம் வாயால் அவர் கூறும் காரணமாகும். அவர் கியாமத்துக்கு முன் உலகிற்கு வந்திருந்தால் கிறித்தவர்கள் கெட்டுப் போனதைக் குறித்து நான் ஏதும் அறியேன் என்ற இப்பதிலையா அவர் அளித்திருப்பார் ? இதனால் அவர் மீண்டும் உலகிற்குப் போகவில்லை என்பதை இத்திருவசனம் மூலமாக அவர் தெளிவாக ஒப்புக் கொண்டிருக்கிறார்.

மேலும் அவர் கியாமத்துக்கு முன் வரக்கூடியவராகவும் சரியாக நாற்பது ஆண்டுகள் (ஆட்சி புரிபவராகவும்) இருந்தால் எனக்கு கிறிஸ்தவர்களின் நிலைமைகள் பற்றி ஒன்றுமே தெரியாது என்று கூறுவதென்பது இறைவன் முன்னால் அவர் பொய் கூறியதாகி விடும். இதற்கு மாறாக எனது இரண்டாவது வருகையின்போது ஏறக்குறைய நாற்பது கோடி கிறிஸ்தவர்கள் உலகில் இருந்தார்கள். அவர்கள் அனைவரையும் கண்டேன். அவர்கள் கெட்டுப் போனதைக் குறித்து நான் நன்றாய் அறிவேன். எல்லா கிறிஸ்தவர்களையும் முஸ்லிம்களாக ஆக்கியதில் நான் சன்மானம் பெற தகுதியுள்ளவனாய் இருக்கிறேன். சிலுவைகளை உடைத்தேன் என்றெல்லாம் அவர் கூறியிருக்க வேண்டும். நான் ஏதும் அறியேன் என்று ஈசா கூறுவது பெரும் பொய்யாகி விடும். சுருங்கச்சொல்லின் முதல் மஸீஹ் மீண்டும் உலகிற்கு வரமாட்டார் என்பதை இத்திருவசனத்தின் மூலம் அவர் மிக தெளிவாக ஒப்புக் கொண்டிருக்கிறார். மேலும் அவர் மரணமடைந்து விட்டார் என்பதே உண்மையாகும். மேலும் ஸ்ரீநகர் முஹல்லா கான்யாரில் அவரது கல்லறை இருக்கிறது. இனி இறைவன் தானாக இறங்கி வருவான். சத்தியத்தோடு போர் புரியும் மக்களை எதிர்த்து அவனே போர் புரிவான். இறைவன் சண்டை செய்வதென்பது ஆட்சேபத்திற்குரியதொன்றல்ல. ஏனெனில் அது அடையாளங்களைக் கொண்டதாய் அமைந்திருக்கும். ஆனால் மனிதன் சண்டை செய்வதோ ஆட்சேபனைக்குரியதாகும். ஏனெனில் அது பலாத்காரத்தை கொண்டதாகும்.

*(கிஷ்தி நூஹ். ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 73-76)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad